சந்ததிகளின் தர்பிய்யத்தில் தாய்மார்களின் பங்களிப்பு
பக்கம் 3

இறையிருப்பைப் பற்றி அறிவித்தவன் இறைவனே ஆவான்
பக்கம் 10

எஸ்ஸன்ஸ் ஆஃப் இஸ்லாம் இஸ்லாம் உண்மையான உயிருள்ள மார்க்கம் (தொடர்-3)
பக்கம் 12

ஹூஸீர் உடன் ஒரு சந்திப்பு
பக்கம் 17

மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | May 2025 | Vol. 4 - Issue No. 6
Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311




பைத்துன் நஸ்ர் பள்ளிவாயில், நார்வே



# திருக்குர்ஆன்

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ
لَيَسْتَخْلِفَنَّهُمْ فِى الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ
مِنْ قَبْلِهِمْ ۖ وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِى
ارْتَضٰى لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْۢ بَعْدِ خَوْفِهِمْ
اَمْنًا ؕ يَعْبُدُوْنَنِىْ لَا يُشْرِكُوْنَ بِىْ شَيْـًٔا ؕ
وَمَنْ كَفَرَ بَعْدَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ

மேலும் அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை, அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாகவும், அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும், அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்தின் நிலைக்குப் பிறகு (அதை) அமைதியின் நிலையாக மாற்றுவதாகவும் அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்க மாட்டார்கள். இதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுப்படாதவர்களாவர். (24:56)



# ஹதீஸ்

عَنْ أَبِي نَجِيحٍ الْعِرْبَاضِ بْنِ سَارِيَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: "وَعَظَنَا رَسُولُ اللَّهِ صلى الله عليه و سلم مَوْعِظَةً وَجِلَتْ مِنْهَا الْقُلُوبُ، وَذَرَفَتْ مِنْهَا الْعُيُونُ، فَقُلْنَا: يَا رَسُولَ اللَّهِ! كَأَنَّهَا مَوْعِظَةُ مُوَدِّعٍ فَأَوْصِنَا، قَالَ: أُوصِيكُمْ بِتَقْوَى اللَّهِ، وَالسَّمْعِ وَالطَّاعَةِ وَإِنْ تَأَمَّرَ عَلَيْكُمْ عَبْدٌ، فَإِنَّهُ مَنْ يَعِشْ مِنْكُمْ فَسَيَرَى اخْتِلَافًا كَثِيرًا، فَعَلَيْكُمْ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الرَّاشِدِينَ الْمَهْدِيينَ، عَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ، وَإِيَّاكُمْ وَمُحْدَثَاتِ الْأُمُورِ؛ فَإِنَّ كُلَّ بِدْعَةٍ ضَلَالَةٌ".

அபுநஜீஹ் அல் இர்பாத் இப்னு ஸாரியா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருமுறை எங்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். அதன் காரணமாக எங்கள் உள்ளங்கள் அச்சத்தால் நிரம்பி கண்களில் கண்ணீர் வந்தது. எனவே நாங்கள் கூறினோம்: ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இது விடைபெறும் சொற்பொழிவு போன்று உள்ளது. எனவே எங்களுக்கு அறிவுரை கூறுங்கள்’. அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறையச்சத்தை மேற்கொள்ளுமாறு நான் உங்களுக்கு அறிவுரை கூறுகின்றேன். உங்களின் அமீருக்கு செவிசாய்த்துக் கட்டுப்படுங்கள். உங்களில் எவர் நீண்ட நாள் வாழ்வாரோ அவர் பெரும் குழப்பத்தைக் காண்பார். எனவே நீங்கள் என்னுடைய சுன்னத்தையும், குலஃபாயே ராஷிதீனின் (நேர்வழி பெற்ற கலீஃபாக்களின்) சுன்னத்தையும் கடைவாய்ப் பற்களைக் கொண்டு பற்றிக் கொள்வதைப் போன்று பேணிக் கொள்ளுங்கள். மார்க்கத்தில் பித்அத்தைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும். (அபூதாவூது ஹதீஸ் எண் 28)

# சந்ததிகளின் தர்பிய்யத்தில் தாய்மார்களின் பங்களிப்பு

## (ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில்)

★★★★★ மதிப்பிற்குரிய நயீமா ஆரிஃப் ஸாஹிபா (சத்ர் லஜ்னா இமாயில்லாஹ் சிகந்தராபாத்) ★★★★★

தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது

قَالَ رَبُّنَا الَّذِيٓ اَعْطٰى كُلَّ شَيْءٍ خَلْقَهٗ ثُمَّ هَدٰى

எங்கள் இறைவன், ஒவ்வொன்றிற்கும் (அவற்றின் தேவைக்கேற்ப) அங்கங்களை வழங்கி, அதிலிருந்து வேலை வாங்கக் கூடிய வழிமுறையை கற்றுக் கொடுத்துள்ளான். (சூரா தாஹா வசனம் 51)



ஒரு தாவரம் துளிர் விடும்போது அது பூமியின் மேலே எந்த அளவு தென்படுகிறதோ அதே போன்று பூமியின் கீழேயும் மண்ணுக்குள் அதே அளவு வளர்வது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? மண்ணுக்குள்ளே வளரக்கூடிய தாவரத்தின் பகுதியை Gravitropic Growth என்று கூறுவார்கள். அது பூமியினுடைய கடுமையான கீழ்பகுதிகளைக் கிழித்துக் கொண்டு தம் பிடியை உறுதியாக்கு -கின்றது. ஆனால் இதற்கு நேர் எதிராக மண்ணுக்கு மேலே இருக்கக்கூடிய பகுதி காற்றில் அசைந்தவாறு சூரியனுடைய ஒளியை நோக்கி வளர்கின்றது. இதை Potonic Growth என்றும் கூறுவார்கள். நான் இந்த விஷயங்களை எல்லாம் எதற்காகக் கூறுகிறேன் என்று நீங்கள் நினைக்கலாம். பூமிக்குள்ளே இருக்கக்கூடிய இந்த விசைக்கு ஈர்ப்பு விசை என்று கூறுவார்கள். அது மண்ணுக்குள்ளே இருக்கக்கூடிய ஊட்டச்சத்துக்கள், கனிமங்கள், சூரிய ஒளி, காற்று, மழை நீர் ஆகிய இந்த அனைத்தும் இறைவனுடைய வெளிப்படையான மற்றும் உட்புறமான அருள்களாகவும். இவை ஒரு தாவரத்தை பசுமையாக ஆக்குவதற்கும் அவசியமாகும்.

முற்றிலும் இதே போன்று ஒரு தாய் தன் குழந்தைகளை வெளிப்புறமான முறையில் வளர்ப்பது மட்டுமின்றி மறைமுகமான முறையிலும் குழந்தையினுடைய ஒழுக்கங்கள், நடவடிக்கைகள், அனைத்து விதமான சிறப்புகள் ஆகியவற்றை உருவாக்குவதிலும், குழந்தையை ஒரு முழுமையான மனிதனாக ஆக்குவதிலும் உதவி செய்கிறாள்.

இப்பொழுது கேள்வி என்னவென்றால், நாம் மிகவும் கவனமான முறையில் செய்ய வேண்டிய குழந்தைகளின் தர்பிய்யத் என்பது என்ன? சந்ததிகளை சரியான முறையில் வளர்ப்பதில் எல்லாரையும் விட அதிக பொறுப்பு தாய்க்கு ஏன் உள்ளது? என்பதாகும்.

ஆகவே, இது தொடர்பாக நாம் அறிய வேண்டியது என்னவென்றால், எந்த வசனத்தை நான் தங்களுக்கு முன் ஓதினேனோ அதில் அல்லாஹ் ஒவ்வொரு பொருளுக்கும் சில குறிப்பிட்ட பொறுப்புகளை நிர்ணயித்துள்ளதாக கூறியுள்ளான். அவற்றுள், ஒரு தாய் தன்னுடைய சந்ததிகளை சரியான முறையில் வளர்ப்பதும் அடங்கும்.

சந்ததிகளை வளர்ப்பது ஒரு தாயின் முதன்மையான பொறுப்பாக ஏன் விளங்குகிறது என்றால், குழந்தை பிறப்பதற்கு முன்பு அது தன் தாயின் கருப்பையில் வளர்கிறது. (அரபி மொழியில் கருப்பைக்கு 'ரிஹம்' என்று கூறுவார்கள்). இது இறைவனுடைய ரஹ்மான், ரஹீம் என்ற பண்புகளின் மூலச் சொல்லான ரே, மீம், ஹே என்பதிலிருந்து வெளிப்பட்டதாகும். இதனுடைய பொருள், குறிப்பாக ஒரு தாயிற்கும் அதன் குழந்தைக்கும் இடையில் இருக்கின்ற இந்த உறவு அன்பு மற்றும் நேசத்தின் இயல்பான உறவாகும். ஒவ்வோர் உயிரினமும் - அது விலங்குகளாக இருந்தாலும் சரி! பறவைகளாக இருந்தாலும் சரி! மனிதனாக இருந்தாலும் சரி! தன்னுடைய தாயின் மடியில் இருந்துதான் அறிவையும், தர்பிய்யத்தையும் அவை பெறுகின்றன.

அல்லாஹ் இதன் பக்கம் சுட்டிக் காட்டியவாறு திருக்குர்ஆனில் சூரா ஆலி இம்ரான் வசனம் 36 இல், رَبِّ اِنِّيْ نَذَرْتُ لَكَ مَا فِيْ بَطْنِيْ என்று கூறி குழந்தைகளின் தர்பிய்யத் தாய்மார்களின் வயிற்றிலிருந்து ஆரம்பிக்கிறது என்று தெரிவித்து விட்டான்.

இது தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (அய்யதஹுஉல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

ஆகவே, குழந்தை பிறந்த பிறகு மிகவும் அச்சத்துடனும், நன்றி உணர்வால் நிரம்பியவாறும் ஒவ்வொரு தாயும் இறைவணக்கத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஆண்களும் பெண்களும் ஆகிய நீங்கள் ஆரோக்கியமான குழந்தைகளுக்காக முதலில் துஆ செய்கிறீர்கள். பிறகு இறைவன் குழந்தையை தந்து விடும் போது அந்தக் குழந்தையை இறைவனுக்கு எதிராக இணையாக ஆக்கிக் கொள்கிறீர்கள் என்று அல்லாஹ்வும் கூறுகின்றான். குழந்தைப் பருவத்தில் இல்லையென்றாலும் அக்குழந்தைகள் பெரியவர்களாக ஆன பிறகு இறைவனுக்கு எதிராகவும் நின்று விடுகிறார்கள். அவர்கள் மார்க்கத்தை விட்டும் விலகி விடுகிறார்கள். 'எங்கள் பிள்ளை சீர்கெட்டு போய் விட்டது; என்னவென்று தெரியவில்லை' என்று பிறகு மக்கள் கடிதம் எழுதுகிறார்கள்......... குழந்தைப் பருவத்தில்

இருந்தே குழந்தைகளுக்காக துஆ செய்வீர்கள் என்றால், அவர்களுக்கு முன்னால் உங்களுடைய முன்மாதிரியை நிலைநாட்டுவீர்கள் என்றால் எவ்வாறான தாய்மார்களின் முன்மாதிரி இவ்வாறு இருக்குமோ அவர்களின் பிள்ளைகள் நன்மைகளிலும் நிலைத்து விடுகிறார்கள். தாய் தந்தை -யருக்கும் கட்டுப்படக் கூடியவர்களாக ஆகி விடுகிறார்கள். (2024 யூ.கே ஆண்டு மாநாட்டில் பெண்களுக்கு ஆற்றிய சொற்பொழிவு)

இப்பொழுது நான் உங்களுக்கு முன்னால் ஹஸ்ரத் குலாம் ரசூல் சாஹிப் ராஜீகி (ரலி) அவர்களின் ஒரு சம்பவத்தை எடுத்து வைக்கிறேன். நம்மையும் அறியாமலேயே நம்முடைய சந்ததிகள் மார்க்கப் பணிகளில் எவ்வாறு தடைகளாக ஆகி விடுகிறார்கள் என்பது அதிலிருந்து தெரிய வருகிறது.

ஒருமுறை அன்னார் தப்லீக் சுற்றுப் பயணத்திற்காக சென்றிருந்தார்கள். ஒரு கலப்பற்ற பெண்மணி தன்னலமற்ற முறையில் பள்ளிவாசலுக்குத் தொண்டாற்றிக் கொண்டிருந்தாள். ஆனால் அப்பெண்மணிக்கு பிள்ளைப் பேறு இல்லாமல் இருந்தது. அன்னார் அப்பெண்மணிக்காக துஆ செய்தபோது அல்லாஹ் ஒரு மகனை வழங்கினான். ஆனால் மகன் பிறந்த பிறகு முன்பு இருந்தது போன்று கித்மத்தின் பக்கம் கவனம் இருக்கவில்லை. இதைப் பற்றி அன்னார் அந்தப் பெண்மணியிடம் விசாரித்தபோது, குழந்தையை பார்த்துக் கொள்வதில் ஈடுபட்டிருப்பதன் காரணமாக எனக்கு இப்பொழுது நேரமே கிடைப்பதில்லை என்று அந்த பெண்மணி பதில் அளித்தாள். இதைக் கேட்டு அன்னார் மிகவும் வருந்தியவாறு, சகோதரியே! இறைப்பணியில் இந்த குழந்தை தடையாக இருக்கிறது என்றால், அல்லாஹ்வே! நீ இந்தத் தடையை அகற்றி விடுவாயாக என்று நாம் இருவரும் சேர்ந்து துஆ செய்யலாம் என்றார்கள். இந்த விஷயத்தைக் கேட்ட உடனேயே அந்த பெண்மணியிடம் நடுக்கம் ஏற்பட்டு விட்டது. அவள் அன்னாருடைய பாதங்களில் விழுந்து மன்னிப்பு கேட்க ஆரம்பித்தாள். என்னிடம் தவறு நிகழ்ந்து விட்டது! இனிமேல் நான் முன்பு போல் தொண்டாற்றுவேன் என்று கூறினாள்.

நம்முடைய சந்ததிகள் நம்முடைய மார்க்க தொண்டிற்கு எதிராக தடையாக இருக்கிறார்களா என்று நாம் நமது உள்ளங்களை சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய தேவை உள்ளது.

பெருமானார் (ஸல்) அவர்களின் ஹதீஸில் வருவது போன்று, தாயின் காலடியில் சொர்க்கம் உள்ளது என்பதற்கு பொருந்துகின்ற தாய்மார்களாக நாம் இருக்கிறோமா என்றும், சந்ததிகளுக்கு சரியான தர்பியத்தை வழங்கி இறை விருப்பத்தை பெறக் கூடியவர்களாக நாம் இருக்கிறோமா என்றும் நாம் பார்க்க வேண்டும். அவ்வாறு இல்லை என்றால், பின்வரும் இந்த ஹதீஸை கொஞ்சம் பாருங்கள்! பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"ஒரு பெண் தன் கணவன் இல்லாத நேரத்தில் தம் வீட்டை சிறந்த முறையில் பார்த்துக் கொள்கிறாள் என்றால், நல்ல பழக்கவழக்கங்களுடன் தம் குழந்தையை வளர்க்கிறாள் என்றால் பிற நல்ல அமல்களை செய்யக் கூடிய ஆண்களுக்கும் ஜிஹாது செய்யக் கூடிய ஆண்களுக்கும் கிடைக்கக் கூடிய அதே கூலி இவ்வாறான பெண்ணுக்கும் கிடைக்கும். பெண்களே! (இதைப்) புரிந்து கொள்ளுங்கள்! எந்தப் பெண்களுக்கு நீங்கள் பிரதிநிதியாக இருக்கிறீர்களோ அந்தப் பெண்களுக்கும் இதைக் கூறி விடுங்கள்!"

பெண்களாகிய நமக்கு இது மிகப்பெரும் விஷயமாகும்! ஆகவே, சந்ததிகளுக்கு நல்ல தர்பிய்யத் கிடைப்பது அவர்களின் அடிப்படை உரிமையாகும். இதன் பக்கம் பெற்றோர்கள் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. பிள்ளைகளின் உள்ளத்தில் நன்மை மற்றும் இறையச்சத்தின் விதையை விதைத்து அதற்கு நீர்ப்பாய்ச்சுவதும் அவசியமாகும். அதன் மூலமாக வீடுகளில் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களின் பெயர்களைக் கொண்ட விளைநிலங்கள் செழிப்பாக வளரும். நமது பிள்ளைகள் பெரியவர்களாக ஆன பிறகு ஜமாஅத்துக்கும் சமூகத்திற்கும் பயனளிக்கக் கூடியவர்களாக ஆவார்கள்.

இப்பொழுது நான் வியப்பை ஏற்படுத்தும் ஓர் ஆய்வின் பக்கம் உங்களுடைய கவனத்தைத் திருப்ப விரும்புகின்றேன். குழந்தைகளின் தர்பிய்யத்திற்கான அசல் காலகட்டம் எது என்று அதிலிருந்து உங்களுக்கு தெரிந்து விடும்.

அமெரிக்காவில் 1300 மக்களிடம் நடத்தப்பட்ட ஓர் ஆய்வின் மூலமாக தற்செயலாக தெரிய வந்த விஷயம் என்னவென்றால், எந்தப் பிள்ளைகள் தம் தாயின் மடியில் இருந்து தர்பிய்யத் பெற்ற பிறகு ஸ்கூலில் சேர்கிறார்களோ அவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது எந்தப் பிள்ளைகள் மிகவும் குறைந்த குழந்தைப் பருவத்தில் Nursery அல்லது School-க்கு செல்கிறார்களோ அவர்கள் அதிக கடின

"ஒரு பெண் தன் கணவன் இல்லாத நேரத்தில் தம் வீட்டை சிறந்த முறையில் பார்த்துக் கொள்கிறாள் என்றால், நல்ல பழக்கவழக்கங்களுடன் தம் குழந்தையை வளர்க்கிறாள் என்றால் பிற நல்ல அமல்களை செய்யக் கூடிய ஆண்களுக்கும் ஜிஹாது செய்யக் கூடிய ஆண்களுக்கும் கிடைக்கக் கூடிய அதே கூலி இவ்வாறான பெண்ணுக்கும் கிடைக்கும். பெண்களே! (இதைப்) புரிந்து கொள்ளுங்கள்! எந்தப் பெண்களுக்கு நீங்கள் பிரதிநிதியாக இருக்கிறீர்களோ அந்தப் பெண்களுக்கும் இதைக் கூறி விடுங்கள்!" - நபிமொழி

மனப்பான்மை கொண்டவர்களாகத் திகழ்கிறார்கள். எந்த குழந்தைகள் தாய்ப்பாசம் மற்றும் தர்பிய்யத்தைப் பெறாமல் இருக்கிறார்களோ அவர்கள் பெரியவர்களான பிறகு சமூக ரீதியாகவோ, உணர்ச்சி ரீதியாகவோ அல்லது உளவியல் ரீதியாகவோ சிக்கல்களை எதிர்கொள்ள நேர்கிறது.

இவ்விஷயத்தை நம்முடைய அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் எந்த அளவு அன்பான முறையில் நமக்குப் புரிய வைத்துள்ளார்கள் என்று பாருங்கள்! அன்னார் கூறுகிறார்கள்: பிறகு இந்த விஷயமும் மிகவும் கவனம் செலுத்தத் தகுந்ததாக உள்ளது! அது என்னவென்றால், பிள்ளைகளின் தர்பிய்யத்திற்கான வயது மிகவும் குறைந்த குழந்தைப் பருவத்தில் இருந்தே ஆரம்பமாகி விடுகிறது. இதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! குழந்தை பெரிதாக ஆன பிறகு தர்பிய்யத்தை ஆரம்பிக்கலாம் என்று ஒருபோதும் நினைக்காதீர்கள். இரண்டு மூன்று வயது என்றாலும் அதுவும் குழந்தைகளின் தர்பிய்யத்திற்கான வயது



ஆகும்...... நான் ஏற்கனவே கூறியது போன்று, வீட்டில் தாய் தந்தையிடமிருந்து, பெரியவர்களிடம் இருந்து குழந்தை கற்றுக் கொள்கிறது. அவர்களைப் பார்க்கிறது. அவர்களைப் பின்பற்றுகிறது. இப்பொழுது குழந்தை மிகவும் சிறிய வயதுடையதாக இருக்கிறது; அதற்கு என்ன தெரியும் என்று தாய் தந்தையர் ஒருபோதும் கருதக் கூடாது. குழந்தைக்கு ஒவ்வொரு விஷயமும் தெரிகிறது. குழந்தை தாய் தந்தையருடைய ஒவ்வோர் அசைவையும் பார்த்துக் கொண்டிருக்கிறது. (ஜுமுஆ குத்பா 13 டிசம்பர் 2013)

அஹ்மதிகளாகிய நாம் நற்பேறு பெற்றவர்களாவோம். ஏனென்றால், அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களின் உண்மையான போதனைகளை அப்படியே நம் வரை கொண்டு சேர்ப்பதற்காகவும், அதன்படி செயல்பட வைப்பதற்காகவும் இக்காலத்தின் இமாமாகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும், கிலாஃபத் அமைப்பும் நமக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு அல்லாஹ்வுக்கு நன்றி!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் பிள்ளைகளின் தர்பிய்யத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்தார்கள். இந்த விவகாரத்தில் அனைத்தையும் விட முதலில் இறைவனிடம் உதவி கேட்குமாறு எப்பொழுதும் வலியுறுத்தி வந்தார்கள். அன்னார் கூறுகிறார்கள்: நேர்வழி மற்றும் தர்பிய்யத் ஆகியவை உண்மையான இறைவனின் செயலாகும்....... நாமோ நமது பிள்ளைகளுக்காக துஆ செய்கின்றோம். மேலோட்டமான முறையில் சட்டங்கள் மற்றும் ஒழுக்க போதனைகள் ஆகியவற்றிக்கு கட்டுப்படுமாறு செய்கின்றோம். இதை விட அதிகம் ஒன்றும் கிடையாது! பிறகு நம்முடைய முழுமையான நம்பிக்கையை அல்லாஹ்வின் மீது வைக்கின்றோம். ஒருவரிடத்தில் எந்த அளவு நற்குணம் இருக்குமோ அது அதற்குரிய காலம் வரும் போது வளர்ந்து விடும். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 309, 2003 ரப்வா பதிப்பு)

இதே விஷயத்தை விளக்கமாக எடுத்துரைக்கும்போது, பெற்றோர்களாகிய நாம் நம்மை கணக்கிட்டுப் பார்க்குமாறு கவனமூட்டியவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: நீங்கள் அல்லாஹ்வுடைய விருப்பத்தைப் பெறுவதற்காக என்ன வேலைகளைச் செய்துள்ளீர்கள்? நீங்கள் உங்களுடைய வருங்கால சந்ததிகளைக் காப்பாற்றுவதற்காக என்ன வேலைகளைச் செய்துள்ளீர்கள்? நம்முடைய நாளை என்பது நமது வாழ்க்கையின் அடுத்த நாளோ அல்லது மரணத்திற்குப் பிறகு உள்ளதோ கிடையாது! மாறாக நம்முடைய நாளை என்பது நமது சந்ததிகளும் ஆவார்கள். அவர்களுக்கு நல்ல தர்பிய்யத் வழங்குவது, அவர்கள் உயரிய ஒழுக்கத்தை கடைபிடிப்பது, மார்க்கத்தில் நிலைநிற்றல், நாட்டுக்கு நன்றியுடைய குடிமக்களாக ஆவது, எல்லா வகையிலும் உயரிய நடத்தைக்குச் சொந்தக்காரராக ஆவது ஆகியவை நம்முடைய சந்ததிகளின் வாழ்க்கையை சரி செய்வதோடு அவர்களின் மறுமையையும் சரி செய்யக் கூடியதாக இருக்கின்றது. இது அல்லாஹ்வுடைய விருப்பத்தைப் பெறக் கூடியவர்களாக அவர்களை ஆக்குகின்ற அதே நேரத்தில் அவர்களுக்கு நல்ல தர்பிய்யத் வழங்கியதன் காரணமாக அல்லாஹ்வுடைய நற்கூலியைப் பெறக் கூடியவர்களாக நம்மையும் ஆக்குகின்றது. (யூ.கே ஆண்டு மாநாடு 29 ஆகஸ்ட் 2017)

2024 யூ.கே ஆண்டு மாநாட்டின்போது பெண்களுக்கு ஆற்றிய சொற்பொழிவில் அன்னார் கூறுகிறார்கள்: “இறைவனுடன் தொடர்பை உருவாக்கிக் கொண்டால் நீங்களும் தப்பித்துக் கொள்ளலாம் உங்களுடைய பிள்ளைகளையும் காப்பாற்றிக் கொள்ளலாம். இறைவன் இன்றி இம்மையும் கிடையாது. மறுமையும் கிடையாது என்ற விஷயத்தை ஒவ்வொரு தாயும் தம் பிள்ளைகளின் உள்ளங்களில் பசுமரத்தாணி போல் பதிய வைக்கக் கூடிய நல்வாய்ப்பை இறைவன் வழங்குவானாக! உள்ளங்களில் இவ்விஷயம் குடிகொண்டு விட்டால், வெளி உலக சூழ்நிலையின் தாக்கத்திற்குள்ளாகி நம் பிள்ளைகள் மார்க்கத்தை விட்டு விலகிச் சென்று விடக் கூடாதே என்ற கவலையை விட்டும் ஓரளவுக்கு நீங்கள் விடுதலை பெற்று விடலாம்!”

பாருங்கள்! ஒரு மிகச்சிறந்த செயல் திட்டத்தை நமது அன்பிற்குரிய இமாம் அவர்கள் நமக்கு வழங்கி இருக்கிறார்கள்.

சந்ததிகளின் தர்பிய்யத் என்ற பேச்சு வரும்போது நாம் சர்வாதிகாரிகளாக ஆகிவிடுகின்றோம். பிள்ளைகளே! நீங்கள் ஐவேளைத் தொழுகையைக் கடைபிடிக்க வேண்டும் தினந்தோறும் திருக்குர்ஆன் ஓத வேண்டும். நன்மையில் நடக்க வேண்டும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று நாம் அறிவுரை கூற ஆரம்பித்து விடுகின்றோம். ஆனால் பெற்றோர்களின் செயலோ இதற்கு முற்றிலும் நேர் எதிராக இருக்கின்றது...... நான் என் சொந்த அனுபவத்தில் கண்ட ஒரு விஷயத்தை உங்களுக்கு முன்னால் எடுத்து வைக்க விரும்புகின்றேன். சந்ததிகளின் தர்பிய்யத் தொடர்பாக திருக்குர்ஆன், ஹதீஸ்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் கலீ∴பாக்களின் வழிகாட்டல்களை நான் அலசி ஆராய்ந்த போது என் வியப்பிற்கு எல்லையே இருக்கவில்லை! ஏனென்றால், அதில் சந்ததிகளின் தர்பிய்யத்தின் மீது அதிக அழுத்தம் கொடுப்பதற்குப் பதிலாக பெற்றோர்களின் தர்பிய்யத் மீது அதிக கவனம் கொடுக்கப்பட்டிருப்பதை நான் கண்டேன்.

இதன் பொருள் என்னவென்றால், நல்ல சந்ததிகள் வேண்டும் என்றால், தாய்மார்களாகிய நாம் முதலில் நல்லவர்களாக ஆக வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்த இரகசியத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

ஹதீஸில் أَعِينُوا أَوْلَادَكُمْ عَلَى الْبِرِّ என்று வந்துள்ளது. அதாவது, நன்மையான பணிகளில் உங்களுடைய சந்ததிகளுக்கு உதவி செய்யுங்கள். (இப்னு மாஜா)

சந்ததிகளுக்கு எவ்வகையில் உதவி செய்ய வேண்டும்? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அன்பான இந்த வழிமுறையைக் கொஞ்சம் பாருங்களேன்! அன்னார் கூறுகிறார்கள்: கடுமையாகப் பின் தொடர்வது, ஒரு விஷயத்தில் எல்லை மீறி வலியுறுத்துவது - அதாவது ஒவ்வொரு விஷயத்திலும் பிள்ளைகளைத் தடுப்பது, கண்டிப்பது ஆகியவை நேர்வழி கொடுப்பதற்கு நாம் தாம் எஜமானர்கள் என்றும், நாம் அவர்களை நமது விருப்பத்திற்கு ஏற்ப ஒரு வழிக்கு கொண்டு வருவோம் என்பதையும் வெளிப்படுத்துகின்றது. இது ஒரு வகையான மறைவான ஷிர்க் ஆகும். இதிலிருந்து நம்முடைய ஜமாஅத் விலகி இருக்க வேண்டும். (மல்∴பூஸாத் தொகுதி 1 பக்கம் 309, 2003 ரப்வா பதிப்பு)

பாருங்கள்! தர்பிய்யத்தின் இந்தப் பொன்னான யுக்தியை நாம் நமதாக்க வேண்டும். இதுவே நல்ல சந்ததிகளுக்கான நிரந்தரமான உத்தரவாதமாகும்.

நல்ல சந்ததிகளை விரும்பாத ஏதேனும் ஒரு தாய் உலகத்தில் இருக்கிறாளா என்ன? சந்ததிகள் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்பதும், அவர்களின் உள்ளங்களில் மார்க்கத்திற்காக துடிப்பு இருக்க வேண்டும் என்பதும் ஒவ்வொரு நம்பிக்கை கொண்ட தாயின் முதன்மையான விருப்பமாக இருக்கின்றது. ஆனால் அதற்காக அந்த அளவுக்கு முயற்சி மேற்கொள்ளப்படுவதில்லை. முயற்சி இருந்தால் நிச்சயமாக அல்லாஹ்வும் தன் அருளை வழங்குவான் - இன்ஷா அல்லாஹ்!

ஆகவே நாம் நம்முடைய பிள்ளைகளின் உள்ளங்களில் குழந்தைப் பருவத்தில் இருந்தே இறை நேசத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது. குழந்தைப் பருவத்தில் இருந்தே தொழும் பழக்கம் உள்ளவர்களாக அவர்களை ஆக்க வேண்டிய தேவை உள்ளது. தினமும் திருக்குர்ஆன் ஓதக்கூடியவர்களாக ஆக்க வேண்டிய தேவை உள்ளது. கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களின் அனைத்து வழிகாட்டல்கள்படியும் செயல்படுவதற்கு எல்லா சாத்தியமான முயற்சிகளையும் நாம் மேற்கொள்ளும் போதுதான் இது சாத்தியமாகும்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் தொழுகை குறித்து கேள்வி கேட்கப்பட்ட போது அன்னார் பதில் கூறினார்கள்: நீங்கள் தொழுகையின் பக்கம் அதிகமாக கவனம் செலுத்துவீர்கள் என்றால், பிள்ளைகளுக்கு முன்னால் தொழுவீர்கள் என்றால், தன்னுடைய தாய் தொழுவதை பிள்ளைகள் பார்க்கும்போது, தன்னுடைய தாய் மிகவும் அச்சத்துடனும், உருக்கத்துடனும் தொழுவதை பிள்ளைகள் பார்க்கும்போது, தன்னுடைய தாய் துஆ செய்வதை பார்க்கும்போது குழந்தைகள் மீதும் ஓர் உளவியல் தாக்கம் ஏற்படும். தானும் தன்னுடைய தாயைப் போன்று செய்ய வேண்டும் என்று அது விரும்பும்......... ஆனால், புரிய வைப்பதற்கு அனைத்தையும் விட மிகச் சிறந்த வழிமுறை என்னவென்றால், தாய் தந்தையினுடைய செயல் நல்லதாக இருக்க வேண்டும்! அவர்கள் தொழக் கூடியவர்களாக இருப்பார்கள் என்றால் கவனம் செலுத்தக் கூடியவர்களாக இருப்பார்கள் என்றால் ஒரு வேதனையுடன் துஆ செய்யக் கூடியவர்களாக இருப்பார்கள் என்றால் நிச்சயமாக பிள்ளைகளின் மீதும் இதனுடைய நல்ல, நேர்மறையான



தாக்கம் ஏற்படும் - இன்ஷா அல்லாஹ்! (Virtual Meeting, ஜமாஅத் அஹ்மதிய்யா Kosovo 29 அக்டோபர் 2023)

பிறகு ஒரு முறை, திருக்குர்ஆன் ஓதுவதன் பக்கம் கவனமூட்டியவாறு மிகவும் வேதனையுடன் அன்னார் கூறினார்கள்: அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பதற்காகவும் வானவர்களின் வட்டத்தில் இணைவதற்காகவும் நம்மில் ஒவ்வொருவரும் திருக்குர்ஆனை ஓத வேண்டியதும், அதை புரிய வேண்டியதும், தம் குழந்தைகளை ஓத வைக்க வேண்டியதும் அவசியம் ஆகும். தினந்தோறும் திருக்குர்ஆன் ஓதுமாறு குழந்தைகளுக்கு வலியுறுத்துங்கள். இந்த விஷயங்கள்படி செயல்பட வைப்பதில் தாய் தந்தையர்களின் முன்மாதிரி குழந்தைகளுக்கு முன்னால் நிலை நாட்டப்படாத வரை குழந்தைகள் மீது எந்த தாக்கமும் ஏற்படாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! (ஜுமுஆ குத்பா 16 செப்டம்பர் 2005)

இந்த வழிகாட்டல்கள் நாம் பயணிக்கும் பாதைக்கு ஒளி விளக்காக விளங்குகின்றன. நாம் நமது சந்ததிகளை வருங்கால சந்ததிகளுக்காக ஓர் உயிருள்ள உதாரணமாக எவ்வாறு விட்டுச் செல்ல வேண்டும் என்று வழிகாட்டுகின்றன. நம்முடைய மடியில் வளர்வது நமது சந்ததிகள் மட்டும் கிடையாது. மாறாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொடியை உலகின் அனைத்துக் கொடிகளை விடவும் உயரப் பறக்கச் செய்கின்ற பிள்ளைகளுக்கு நாம் தாய்மார்களாக இருக்கின்றோம். ஆகவே இவ்வாறான சந்ததிகளை சாதாரண முறையிலும், கவனமற்ற முறையிலும் வளர்க்க வேண்டுமா என்ன? ஒருபோதும் கிடையாது. அஹ்மதி தாய்மார்களாகிய நம் மீது எவ்வாறான மகத்துவமிக்க பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது என்றால், எந்தவோர் உலக தாயின் மீதும் அவ்வாறான பொறுப்பு கிடையாது.

இது தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃ.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பல குத்பாக்களில் எடுத்துக் கூறிய ஒரு பிரபல்யமான சம்பவத்தை நான் தங்களுக்கு முன்னால் எடுத்து வைக்கின்றேன்.

விஷமத்தனம் செய்யக்கூடிய ஓர் இளைஞன் இருந்தான். அவனுடைய தாயார் அவனுக்கு தேவையற்ற அன்பும் பாசமும் கொடுத்து வளர்த்து வந்தாள். அவன் அதற்குப் பின்னால் ஒளிந்து கொண்டு விஷமத்தனத்தில் இன்னும் முன்னேறிக் கொண்டே சென்றான். பொய் பேசுவது, தவறான வேலைகளில் ஈடுபடுவது ஆகியவை அவனுடைய வேலையாக ஆகி விட்டது. அவனைப் பற்றி முறையீடு செய்வதற்காக அவனுடைய தாயிடம் மக்கள் வரும்போது அந்த தாய் தன் குழந்தையை எச்சரிப்பதற்குப் பதிலாக ஒரு தலைபட்சமாக நடந்து கொள்வாள். இதன் காரணமாக விஷயம் எந்த அளவு சென்று விட்டது என்றால், அவன் கொலைகாரனாக மாறிவிட்டான். அந்த குற்றத்தின் காரணமாக அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவனிடம் அவனுடைய கடைசி ஆசை குறித்து கேட்கப்பட்ட போது, தன் தாயுடைய நாக்கை முத்தமிட விரும்புவதாக கூறினான். அந்த தாய் தன்னுடைய நாக்கை வெளியே நீட்டியபோது அந்த இளைஞன் தன் தாயுடைய நாக்கை எந்த அளவு வேகமாக கடித்தான் என்றால் அது துண்டாகி கீழே விழுந்து விட்டது. அந்த தாய் அழுது கூச்சலிட்டபோது மக்கள் வியப்படைந்து இவ்வாறு நடந்து கொண்டதற்கான காரணத்தை அவனிடம் கேட்டார்கள். அதற்கு அவன், நான் தவறு செய்யும் போதெல்லாம் என்னுடைய தாய் என்னை தடுப்பதற்குப் பதிலாக என் தீமைகளை மறைத்து வந்தாள். அதன் காரணமாக நான் கடுமையான உள்ளம் கொண்ட ஒரு குற்றவாளியாக மாறிவிட்டேன் என்றான்.

இன்றைய காலத்தில் சந்ததிகளின் தர்பிய்யத் விஷயத்தில் குறைபாடு ஏற்படுவதற்கு ஒரு மிகப்பெரும் காரணம் என்னவென்றால், பிள்ளைகளுடன் பெற்றோர்கள் கடுமையான முறையில் நடந்து கொள்வதாகும். தாய் தந்தையர் பிள்ளைகளுக்கு தேவையற்ற அன்பும் பாசமும் கொடுப்பதற்குப் பதிலாக அல்லது தேவையில்லாமல் கடுமை காட்டுவதற்குப் பதிலாக ஒரு நட்பு ரீதியான சூழலை உருவாக்க வேண்டும். குழந்தைகள் உங்களுடன் பேசுவதற்கு எவ்வித தயக்கத்தையும் உணரக் கூடாது. அவர்கள் உங்களுடன் ஒன்றி இருக்கும் வகையில் வீட்டில் அவர்களுக்கு அவ்வாறான விளையாட்டுக்கான ஏற்பாடை செய்து கொடுங்கள்.

பெற்றோர்களும் பிள்ளைகளும் தம் விஷயங்களை வெளிப்படையாகப் பேசி, தம் உணர்வுகளைப் பகிரும் வகையில் பெற்றோர்களுக்கு பிள்ளைகளுடன் இருக்கும் Communication Gap-ஐ எவ்வாறு நீக்க முடியும்? என்று ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃ.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் கேட்கப்பட்ட போது அன்னார் கூறினார்கள்: ஒவ்வொரு வீட்டிலும், தத்தமது சூழலில் ஒவ்வொருவரும் அவரவர் முறைப்படி தர்பிய்யத் அளிக்க வேண்டியது வரும். பிள்ளைகளை அருகில் கொண்டு வர வேண்டியது வரும். தாயும் தந்தையும் இவ்வாறு (பிள்ளைகளுடன்) தொடர்பை ஏற்படுத்துவார்கள் என்றால் இது சாத்தியமாகும். வீட்டுச் சூழல் நிம்மதி தரக் கூடியதாக இருக்கும் என்றால், பெற்றோர்கள் நமக்கு தாய் தந்தையர் மட்டுமின்றி அவர்களுடன் நமக்கு நட்பு ரீதியான தொடர்பும் உள்ளது என்று பிள்ளைகள் உணர்வார்கள் என்றால் அவர்கள் பல விஷயங்களைப் பகிர்ந்து கொள்ளவும் செய்வார்கள். வீட்டிலும் நேரம் செலவிட முயற்சி செய்வார்கள். தற்காலத்தின் சுற்றுச்சூழல் கேடு குறித்தும், தீமைகள் குறித்தும் பிள்ளைகள் கேள்வி கேட்கவில்லை என்றாலும் கூட கதை வடிவில் இன்னின்ன தீமைகள் உள்ளன என்று விஷயங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். பிள்ளைகளுக்கு நல்லது கெட்டது பற்றிய வேறுபாட்டை நீங்கள் கூற மாட்டீர்கள் என்றால் பிள்ளைகள் அதை எவ்வாறு புரிந்து கொள்வார்கள்? சிறு வயது முதல் பெரியவர்களாக ஆகும் வரை 15, 16 வயது வரை குழந்தைகளை நீங்கள் கண்காணித்து வாருங்கள். அவ்வாறு செய்வீர்கள் என்றால் பிறகு பிள்ளைகள் நல்லவர்களாக வளர்வார்கள். (Virtual Meeting மஜ்லிஸே ஆம்லா அன்ஸாருல்லாஹ் கனடா 9 ஜுன் 2023)

இன்று உலகம் எந்த அளவு வேகமாக புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகளில் முன்னேறிச் செல்கிறதோ அதே அளவு நம்முடைய சமூகத்தில் தீமைகள் வேரூன்றி வருவதை நாம் பார்க்கின்றோம். தாய்மார்களாகிய நாம் இப்பொழுது கூட நமது கடமைகளைப் புரிந்து கொள்ளவில்லை என்றால், நம் சந்ததிகள் இந்தப் புதைகுழியில் விழுவதை விட்டு நம்மால் ஒருபோதும் காப்பாற்ற இயலாது. இதைக் குறித்து அல்லாஹ் முன்பே திருக்குர்ஆனில் எச்சரிக்கை செய்து விட்டான்.

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا قُوا أَنْفُسَكُمْ وَأَهْلِيكُمْ نَارًا

நம்பிக்கை கொண்டவர்களே! உங்களையும் உங்களது குடும்பத்தையும் நெருப்பில் இருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள். (சூரா தஹ்ரீம் வசனம் 7)

அந்த நெருப்பு என்ன? நாம் அனைவரும் அறிந்தது போன்று அதற்கு பல தோற்றங்கள் உள்ளன. முன்னேற்றம் அடையக்கூடிய புதிய விஞ்ஞானமும் அதன் தோற்றங்களுள் ஒன்றாக Phone உள்ளது. பல்வேறு வகையான சமூக ஊடகங்களின் Applications உள்ளன. அவற்றைத் தவறாகப் பயன்படுத்துவதால் ஒழுக்கக்கேடுகளுக்கும், தீமைகளுக்கும் நம் வீடுகளில் இடம் கொடுக்கக் கூடியவர்களாக நாம் ஆகி விடுவோம்.

இன்றைய சுற்றுச்சூழலில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் சமூக ஊடகத்தின் தீய தாக்கங்கள் தம் பிடிக்குள் வைத்துள்ளன. இது தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.்பத்துல் மஸீஹ் (அய்யத -ஹுல்லாஹ்) அவர்கள் எச்சரிக்கை செய்தவாறு கூறுகிறார்கள்: இந்தக் காலத்தில் பல்வேறு வகையான வழிமுறைகள் தோன்றி விட்டன. இந்தக் காலத்தில் இன்டர்நெட் உள்ளது. அதில் ஒழுக்கக்கேடான சினிமாக்கள் உள்ளன. வெப்சைட்டில், டிவியில் ஒழுக்கக்கேடான சினிமாக்கள் உள்ளன. ஒழுக்கக் கேடான, வீணான (பத்திரிகை) இதழ்கள் உள்ளன. Pornography என்று அழைக்கப்படும் அந்த ஒழுக்கக்கேடான இதழ்களுக்கு எதிராக இப்பொழுது இங்கும் குரல் எழ ஆரம்பித்து விட்டது. இவ்வாறான இதழ்களை ஸ்டால்களிலும், கடைகளிலும் பகிரங்கமாக வைக்க வேண்டாம். ஏனென்றால், குழந்தைகளின் ஒழுக்கத்தில் தீய தாக்கம் ஏற்படுகிறது என்று குரல் எழ ஆரம்பித்து விட்டது. இம்மக்களுக்கோ இன்றுதான் இந்த சிந்தனை வந்துள்ளது. ஆனால் திருக்குர்ஆனோ 1400 வருடங்களுக்கு முன்பே இதைக் குறித்து கட்டளை இட்டுள்ளது. இந்த அனைத்தும் வெட்கக்கேடு ஆகும். அதற்கு அருகில் கூட செல்ல வேண்டாம். அது உங்களை வெட்கமற்றவராக ஆக்கி விடும். இறைவனை விட்டு உங்களை விலக்கி விடும். மார்க்கத்தை விட்டு விலக்கி விடும். இன்னும் கூறுவதென்றால், சட்டத்தை மீறக்கூடியவராகவும் உங்களை ஆக்கி விடும். இஸ்லாம் வெளிப்படையான வெட்கக்கேட்டில் இருந்து தடுப்பது மட்டுமின்றி மறைவான வெட்கக்கேட்டில் இருந்தும் தடுக்கின்றது. (ஜுமுஆ குத்பா 2 ஆகஸ்ட் 2013)

ஆகவே, தாய்மார்களாகிய நாம் நமது சந்ததிகளின் Chatting மற்றும் அவர்களின் தொடர்புகளின் மீது ஒரு பார்வை வைத்திருக்க வேண்டும். குழந்தைகள் நம் கண்களுக்கு முன்னாலேயே பொருத்தமற்ற தொடர்புகளை உருவாக்கிக் கொண்டிருப்பதை பல முறை பார்க்க முடிகிறது. அதனுடைய தாக்கம் பிறகுதான் வெளிப்படும். தாய்மார்களுக்கு அதைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்று கூறுவது முற்றிலும் சாத்தியமற்ற விஷயமாகும். தாய்மார்களாகிய நாம் நமது சந்ததிகள் மீது தக்க சமயத்தில் கவனம் செலுத்தி, அவர்களை சரியாக கண்காணிப்போம் என்றால் இந்த தீமைகளில் இருந்து நாம் நம் சந்ததிகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்!



இந்த நெருப்பிலிருந்து தப்பித்துக் கொள்வதற்குரிய ஒரே வழிமுறை, அல்லாஹ்வின் கயிறாகும். அதாவது கிலா.்பத்துடன் ஒன்றியிருப்பதாகும். இதுவே உலகின் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் உரிய தீர்வு ஆகும். இதுவே அனைத்து நோய்களுக்குமான மருத்துவம் ஆகும். இதுவே நிம்மதிக்கான இரகசியம் ஆகும்.

ஹுஸூர் அவர்களிடம், தங்களுடைய குழந்தைப் பருவத்தினுடைய ஏதாவது சம்பவம் தங்களுக்கு நினைவில் உள்ளதா என்று கேட்கப்பட்டபோது அன்னார் கூறினார்கள்:

எனக்கு 8, 9 வயதாக இருந்தபோது, ஒருமுறை ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) உடல் நலம் இல்லாமல் இருந்தார்கள். அன்னார் கட்டிலில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். என்னுடைய பாட்டனார் ஷரீ∴ப் அஹ்மது சாஹிப் அவர்கள் நலம் விசாரிப்பதற்காக செல்லும்போது என்னையும் அழைத்துச் சென்றார்கள். இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களுடன் எனது பாட்டனாருக்கு மிகவும் நெருங்கிய உறவுமுறை இருந்த போதிலும் அவர்கள் சந்திப்பதற்காக முதலில் அனுமதி கேட்டார்கள். நாற்காலி இருந்த போதிலும் அவர்கள் தரையில் அமர்ந்து கொண்டு பேசினார்கள். பேசி முடித்த பிறகு முகத்தைத் திருப்பிச் செல்லாமல் அவ்வாறே அந்த அறையை விட்டு வெளியே வந்தார்கள். அந்த நேரத்தில் இருந்து எனது உள்ளத்தில் கிலா∴பத்தின் மீது ஒரு தனித்துவமான அன்பும் கண்ணியமும் உருவாகி விட்டது. (This week with Huzur 26-11-2021)

நம்முடைய முன்மாதிரியும் இவ்வாறு உள்ளதா என்று நாம் நம்மை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். கிலா∴பத்துடன் நமது நன்றி உணர்வின் தொடர்பு இவ்வாறு உள்ளதா என்றும், நம்மைக் கண்டு நமது பிள்ளைகள் கற்றுக் கொள்ள கூடிய அளவில் நாம் இருக்கிறோமா என்றும் நாம் பார்க்க வேண்டும்.

அல்லாஹ் நம்மிடத்திலும், நமது சந்ததிகளின் உள்ளங்களிலும் கிலா∴பத்திற்காக இவ்வாறான நேசத்தையும் கண்ணியத்தையும் உருவாக்குவானாக! தம்முடைய சந்ததிகளை சரியான முறையில் வளர்க்கும் உரிமையை செலுத்தக்கூடிய தாய்மார்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக!

ஆகவே, தாய்மார்களாகிய நாம் அனைவரும், நமது சந்ததிகளும் கலீ∴பாவுடன் தனிப்பட்ட தொடர்பை உருவாக்க வேண்டும். கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களின் குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகள் நேரலையாக வரும்போது வீடுகளில் அவற்றை கேட்கக்கூடிய ஏற்பாட்டை செய்யுங்கள். கலீ∴பத்துல் மஸீஹ் அவர்கள் கூறுகின்ற வழிகாட்டலின் படி நீங்களும் அமல் செய்ய வேண்டும். அமல் செய்யுமாறு பிள்ளைகளுக்கும் வலியுறுத்த வேண்டும். இதற்காக எல்லா சாத்தியமான முயற்சிகளையும் மேற்கொள்ளுங்கள். கடிதம் வாயிலாக கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களுடன் தனிப்பட்ட தொடர்பை உருவாக்குங்கள். அதன் மூலமாக நேரடியாக அன்னாருடைய துஆக்களுக்கு நீங்கள் வாரிசாக ஆக முடியும்.

கலீ∴பத்துல் மஸீஹ் அவர்கள் 2024 யூ.கே ஆண்டு மாநாட்டில் பெண்களுக்கு ஆற்றிய சொற்பொழிவில் மிகவும் வேதனையுடன் கூறிய ஒரு மேற்கோளை எடுத்து வைத்து எனது சொற்பொழிவை நான் நிறைவு செய்வேன்.

அன்னார் கூறுகிறார்கள்: ஆகவே, எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! உலகை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளிப்பதாக நாம் உடன்படிக்கை செய்திருக்கும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நீங்கள் உண்மையாகவே இந்த உடன்படிக்கையை நிறைவேற்றினீர்கள் என்றால் பிறகு அல்லாஹ் உங்களை பாதுகாக்கக் கூடியவனாக இருப்பான். உங்களை அவன் காப்பாற்றி விடுவான். உலகைக் கண்டு அஞ்ச வேண்டிய தேவை கிடையாது. உலகிலிருந்து தாக்கத்தைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டாம். மாறாக ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு சிறுமியும் உலகின் மீது தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று முயற்சிக்க வேண்டும். அல்லாஹ்வின் பாதங்களில் உலகைக் கொண்டு வர வேண்டும் என்று முயற்சிக்க வேண்டும். இதுவே ஓர் அஹ்மதியின் பொறுப்பாகும். இதுவே அஹ்மதியின் கடமையாகும். இதற்காகத்தான் அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளார். ஆகவே இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. நாம்தான் உலகில் புரட்சியை ஏற்படுத்த வேண்டும். நாம்தான் உலகிற்கு நேரான பாதையை காட்ட வேண்டும். நாம்தான் இறைவனுக்கு முன்னால் குனியக் கூடியதாக உலகை ஆக்க வேண்டும். நாம்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடிக்கு கீழே உலகை கொண்டு வர வேண்டும். இதற்காக நாம் நம்முடைய நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். நமது சந்ததிகளின் நிலைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இது நிகழ்ந்து விட்டால் பிறகு உலகில் புரட்சி ஏற்பட்டு விடும். அதை நாம் உலகில் ஏற்படுத்த முடியும்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! ஆமீன் யா ரப்பல் ஆலமீன்!

தாய் பாசம் என்பது நிலவின் குளுமையைப் போன்றது. அது முற்றிலும் குளுமையான ஒளியாகும்.



கொதிக்கின்ற வெயில் கூட தாயின் நிழலில் மறைந்து போய்விடும்!

இறைவா! நிழல் தரும் இம்மரத்தை எப்பொழுதும் பசுமையாக வைத்திருப்பாயாக!

இறைவா! இந்த தோட்டம் நலமுடன் இருக்கட்டும். நீயே இதை பாதுகாப்பாயாக.




ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

ஆட்சேபனை-3: பகுத்தறிவு மட்டுமே முழுமையான அறிவாற்றலுக்கும் நிச்சய உறுதிக்கும் வழிவகுக்காமல் இருக்கலாம். ஆனால் அது அறிவின் ஒரு படித்தரத்தை வழங்குகிறது. மீட்பிற்கு அதுவே போதுமானது.

பதில்: இது முற்றிலும் ஒருதலைப்பட்சமான அனுமானமாகும். ஐயங்களுக்கும் சந்தேகங்களுக்கும் ஆட்படாமல் ஒரு நல்ல முடிவிற்கு வருவது நிச்சய உறுதியில்லாமல் சாத்தியமற்றதாகும் என்பதையும், அந்த நிச்சய உறுதியை இணையற்ற ஓர் இறைவேதத்தின் மூலமே அன்றி பெற முடியாது என்பதையும் நான் ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளேன். அதைப் போன்றே முழுமையான அறிவின்றி பிழைகளைத் தவிர்க்க முடியாது. முழுமையான அறிவினை முழுமையான இறைவெளிப்பாடு இன்றி ஒருவரால் பெற முடியாது. அவ்வாறிருக்க, முழுமையற்ற உதவியற்ற பகுத்தறிவு சுயமே எவ்வாறு மீட்பிற்கு இட்டுச் செல்ல முடியும்?

குறிப்பாக, ஐரோப்பிய தத்துவவாதிகளின் தாக்கத்-திற்காளாகி இறைவனைப் பற்றிய அறிவு குறித்து பிரம்ம சமாஜிகள் கைக்கொள்ளும் விசித்திரமான பகுத்தறிவு வழிமுறை குறைபாடுடையதும் தெளிவற்றதும் ஆகும். எந்தவொரு உறுதிக்கும் வழிவகுக்காமல், அது மனிதனை எல்லா வகையான குழப்பங்களிலும் நிச்சயமற்ற தன்மையிலும் மூழ்கடிக்கின்றது. ஏனெனில் அது வல்லமைமிக்க இறைவனை அவனது கண்ணியம் மற்றும் மகிமை ஆகியவற்றை இழந்த உயிரற்ற ஒரு கைப்பாவையாக குறைத்து விடுகிறது. இறையிருப்பைக் குறித்த அறிவு இறைவனிடமிருந்து வரவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். மாறாக ஞானிகளின் தியானத்தின் மூலமாக அவன் தற்செயலாக அறியப்பட்டான் என்கின்றனர்.

அவர்களின் கதை இவ்வாறாகும். மனித இருப்பின் தொடக்கத்தில், மக்கள் காட்டுமிராண்டிகள் போன்று முற்றிலும் அறிவற்றவர்களாக இருந்தனர், மேலும் இறைவன் தன்னுடைய இருப்பைப் பற்றி அவர்களுக்கு எந்த அறிவையும் கொடுக்கவில்லை. ஒரு கடவுளை நியமிக்க வேண்டும் என்பது படிப்படியாக மக்களுக்குத் தோன்றியது. ஆரம்பத்தில், அவர்கள் மலைகள், மரங்கள், ஆறுகள் மற்றும் பிற பொருட்களை வணங்கத் தொடங்கினர், அவர்களை ‘கடவுள்’ என்று அழைத்தனர். அவர்கள் முன்னேறியபோது, காற்று மற்றும் புயல் போன்றவற்றின் பக்கம் திரும்பினர். அவற்றை சக்திவாய்ந்த கடவுள்களாகக் கருதினர். பின்னர், மேலும் முன்னேறி, அவர்கள் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களை தங்கள் தெய்வங்களாகக் கருதினர். எனவே இந்த வழியில், ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு, அவர்கள் படிப்படியாக உண்மையான இறைவனிடம் திரும்பினர்.

இவர்களின் இந்த விளக்கம் மேலான இறைவனின் உண்மையான இருப்பின் மீது எந்த அளவு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்பதையும் தான் நாடியதைச் செய்யும் ஆற்றல் பெற்றுள்ள உயிருள்ள வாழ்வளிக்கின்ற இறைவன் மீது எவ்வளவு அவநம்பிக்கையை வெளிப்படுத்துகிறது என்பதையும் சற்று கவனியுங்கள்! மறைவானவற்றை அறிகின்ற எல்லாம் வல்ல ஓர் இருப்பின் தரப்பிலிருந்து நாம் எதிர்பார்ப்பது போல அவன் தனது இருப்பின் செய்தியை வழங்கவில்லை (இறைவன் காப்பானாக) என்று நம்மை நம்புமாறு இந்தக் கொள்கை தூண்டுகிறது. மாறாக இது முற்றிலும் மனித முயற்சியின் பயனாக வெளிப்பட்டுள்ளது.

ஒருநாள், தற்செயலாக ஓர் இறைவனை நியமித்து மனிதன் மகிழ்ச்சி கொண்டான். முன்னதாக அவன் நீர், மரங்கள் மற்றும் கற்களை வணங்க ஆரம்பித்தான். ஆனால் இறுதியில் எந்தவொரு காரணமும் இல்லாமல், அத்தகைய பொருள்கள் இறைவனாக இருக்க முடியாது என்று நம்பத் தொடங்கினான். இறைவன் நாம் பார்க்க முடியாத வேறு ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் (என்று கருத ஆரம்பித்தான்). இந்த ‘இறைவன்’ உண்மையிலேயே இருந்திருந்தால், அவன், உயிருள்ள நபர்களைப் போலவே, அவனுடைய இருப்பைப் பற்றி மற்றவர்களிடம் ஏதாவதொரு

நேரத்தில் நிச்சயமாகத் தெரிவித்திருப்பான் என்ற சந்தேகத்தை இந்த நம்பிக்கை உருவாக்காதா?

குறிப்பாக, அத்தகைய சிந்தனையுடன் கூடிய ஒருவர், இறைவனை முழுமையற்றவனாகவும், குறைபாடு உடையவனாகவும் அல்லது ஊமையாகவும் நினைப்பது சரியானதல்ல என்று கருதும்போது, அவனுக்குப் பார்ப்பது, கேட்பது, அறிதல் போன்றவற்றின் சரியான பண்புகளை அவன் கொண்டிருப்பது அவசியம், எனவே அவன் பேசும் திறனைக் கொண்டிருப்பது அவசியம். இறைவனுக்கு பேசும் சக்தி இருந்தால், அதன் ஆதாரம் எங்கே என்று அவர் ஆச்சரியப்படுவார். அவனுக்கு இந்த சக்தி இல்லையென்றால், அவன் எப்படி சரியானவனாக இருக்க முடியும்? அவன் பரிபூரணமானவனாக இல்லாவிட்டால், அவன் எப்படி கடவுளாக இருக்கத் தகுதியானவன்? அவனை ஓர் ஊமையாக நினைப்பது சரியானது என்றால், அவனை ஏன் பார்வையற்றவனாகவும் காது கேளாதவனாகவும் நம்பக் கூடாது? இறைவெளிப்பாட்டை நம்புவதன் மூலம் மட்டுமே மனிதன் இத்தகைய சந்தேகங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியும். இல்லையெனில், நாத்திகத்தின் குழியில் தடுமாறுவதன் மூலம் ஆயிரக்கணக்கான தத்துவஞானிகள் அழிந்து விட்டதைப் போன்றே, அவரும் அழிந்து விடுவார்.

இப்போது நியாயமான எண்ணம் கொண்ட ஒவ்வொரு நபரும் இந்த நம்பிக்கை இறைவனின் இருப்பை மறுப்பதற்கு வழிவகுக்கிறதா இல்லையா என்பதைப் பாரபட்சமின்றி தீர்ப்பளிக்க வேண்டும். ஒருவருடைய கருத்தின்படி தர்க்கவாதிகள் இல்லாதிருந்தால், இறைவனுடைய இருப்பைப் பற்றிய எந்தத் தடயமும் இருக்காது என்கின்ற அளவுக்கு இறைவன் மிகவும் பலவீனமாவன் என்றால் அத்தகைய நபரின் நம்பிக்கைக்கு ஏதேனும் உத்தரவாதம் இருக்கிறதா? இறைவன் மனிதகுலத்தை தனது ஒரு சில பண்புகளைக் கொண்டு அல்ல, மாறாக அனைத்துப் பண்புகளையும் கொண்டு நிலைநிறுத்துகிறான் என்பதை இந்த அறிவிலிகள் உணர்வதில்லை. இந்த முழுமையான பண்புகளில் சிலவற்றால் மனிதகுலத்திற்கு எந்தப் பயனும் இருக்கக் கூடாது என்பது எப்படி சாத்தியம்? அவன் முழுமையான ரப்புல்ஆலமின் - எல்லா உலகங்களையும் படைத்து பரிபாலிப்பவன் அல்ல. மாறாக ஒரு பாதி அல்லது மூன்றில் ஒரு பங்கு மட்டுமே என்று நம்புவதை விட ஒரு பெரிய அவதூறு இருக்க முடியுமா?

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 3 ஆங்கிலப் பதிப்பு பக்கம் 79-80)

**(தமிழில்: A. நாஸிர் அஹ்மத்)**

### ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் அனைத்துலக அஹ்மதி முஸ்லிம்களிடம் வாங்கிய உறுதிமொழி

அஷ்ஹது அ(ன்)ல்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீ(க்)கலஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு (3 முறை)

இன்று (27, மே 2008) அஹ்மதிய்யா கிலாஃபத் நூறு ஆண்டு நிறைவு பெற்றதற்காக, நாம் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு எடுத்துக் கொள்ளும் உறுதிமொழி என்னவென்றால், நாங்கள் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தைப் பரப்புவதற்காகவும், முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயரை உலகின் எல்லைகள் வரை எட்ட வைப்பதற்காகவும் எங்கள் வாழ்க்கையின் கடைசி நொடிப் பொழுது வரை முயற்சி செய்து கொண்டிருப்போம். மேலும் இந்த புனிதமான கடமையை நிறைவேற்றுவதற்காக எப்பொழுதும் எங்கள் வாழ்க்கையை இறைவனுக்காக –வும், அவனது தூதர் (ஸல்) அவர்களுக்காகவும் அர்ப்பணித்திருப்போம். மேலும் மாபெரும் தியாகங் –களைச் செய்து மறுமை வரை உலகின் ஒவ்வொரு நாட்டிலும் இஸ்லாத்தின் கொடியை மேலோங்கி வைப்போம். நாங்கள் கிலாஃபத் அமைப்பை பாதுகாப்பதற்காகவும், அதனை உறுதிபடுத்துவதற் –காகவும் இறுதி மூச்சு வரை முயற்சி செய்து கொண்டிருப்போம்.

அஹ்மதிய்யா கிலாஃபத் மறுமை வரை பாதுகாப்புடன் இருப்பதற்காகவும், மறுமை வரை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலம் இஸ்லாம் பரவிக் கொண்டிருப்பதற்காகவும், ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடி உலகின் எல்லா கொடிகளையும் விட உயரமாகப் பறப்பதற்காக –வும், கிலாஃபத்துடன் எப்பொழுதும் பற்றுள்ளவர்களாக இருக்குமாறும், அதன் அருள்களிலிருந்து பயன் பெறுமாறும் நாங்கள் எங்கள் சந்ததிகளுக்கும், சந்ததிகளின் சந்ததிகளுக்கும் அறிவுரை கூறிக் கொண்டிருப்போம் என்றும் உறுதி கூறுகிறோம்.

இறைவா! நாங்கள் இந்த உறுதிமொழியை நிறைவேற்றும் நல்வாய்ப்பை நீ எங்களுக்கும் வழங்குவாயாக.

அல்லாஹும்ம ஆமீன்! அல்லாஹும்ம ஆமீன்!! அல்லாஹும்ம ஆமீன்!!!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் நூல்களிலிருந்து

எஸ்ஸென்ஸ் ஆ∴ப் இஸ்லாம்

3

தொகுதி 1

# இஸ்லாம் உண்மையான உயிருள்ள மார்க்கம்


அதிகாரம் 1

தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மத்

## இஸ்லாத்தின் அருள்கள்:

நான் இப்போது இஸ்லாத்தின் கனிகள் குறித்து விளக்கிட விரும்புகிறேன். உண்மையை தேடும் ஒருவர் இஸ்லாத்தின்படி தமது வாழ்வை முழுவதுமாக வைத்துக் கொள்ளும்போது, அவரது ஆற்றல்களுள் ஒவ்வொன்றும் எவ்வித செயற்கைத்தனமோ பாசாங்கோ இன்றி மகத்துவமிக்க இறைவனின் பாதையில் தன்னிச்சையாக அடி எடுத்து வைக்கும் போது, அவரது முயற்சிகளின் விளைவாக, தெய்வீக வழிகாட்டலின் உன்னத தோற்றங்கள் இடையிலுள்ள திரைகளை எல்லாம் அகற்றியவாறு அவரை நோக்கி விரைந்து வருகின்றன என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். பல்வேறு வகையான அருள்கள் அவர் மீது இறங்குகின்றன. நம்பிக்கையின் அடிப்படையிலும் கேள்விப்பட்டதன் மூலமாகவும் அவர் ஏற்றுக் கொண்டிருந்த கட்டளைகளும், கொள்கைகளும், இப்போது உண்மையான காட்சி மற்றும் தெளிவான இறைஅறிவிப்பு வாயிலாக நிச்சய உறுதிகளாக உணர்ப்படுகின்றன. ஈமான் மற்றம் ஷரீஅத்தின் புதிர்கள் அவருக்கு விளக்கப்படுகின்றன. முழுமையான நிச்சய உறுதி மற்றும் அறிவின் நிலையை அவர் அடைவதற்காக, தெய்வீக ஆட்சியின் காட்சியினைக் காணும் வாய்ப்பு அவருக்கு வழங்கப்படுகிறது. அவரது நாவும், அவரது சொற்களும், அவரது அனைத்து செயல்களும், அவரது அசைவுகளும் தனிச்சிறப்புமிக்க ஓர் அருளைக் கொண்டுள்ளன. அசாதாரணமாக தைரியமும் பொறுமையும் அவருக்கு வழங்கப்படுகிறது. அவரது அறிவு ஓர் உன்னத நிலையில் விரிவாக்கப்படுகிறது.

மனித இயல்பின் குறைகளான அற்பத்தனம், கஞ்சத்தனம், தடுமாற்றம் அடைதல், குறுகிய மனப்பான்மை, இச்சைகள் மீது ஈர்ப்பு, கீழான ஒழுக்க நிலை, அகந்தையின் இருள் ஆகியவை அவரிடமிருந்து முற்றிலும் அகற்றப்படுகின்றன. இறைப் பண்புகளின் ஒளியால் அவர் நிரப்படுகிறார். அதன் பிறகு அவர் முற்றிலும் மாறுதல் அடைந்தவராக புதிய பிறப்பின் ஆடையை அணிந்து கொள்கிறார். மகத்துவமிக்க இறைவனின் மூலமே அவர் கேட்கிறார். அவர் பார்க்கிறார். அவன் மூலமே அவர் நடக்கிறார். அவன் மூலமே நிற்கிறார். அவரது கோபம் மகத்துவமிக்க இறைவனின் சாபமாகி விடுகிறது. அவரது பரிவு மகத்துவமிக்க இறைவனின் கருணையாகி விடுகிறது.




அந்த நிலையை அவர் அடையும்போது, ஒரு சோதனையாக அல்லாமல், தேர்ந்தெடுக்கப்பட்டதன் அடையாளமாக அவரது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அவர் பூமியில் இறைவனின் சான்று ஆக ஆகி விடுகிறார். இறைபாதுகாப்பின் தோற்றமாக ஆகி விடுகிறார். அவர் நிமித்தமாக விண்ணில் மகிழ்ச்சி ஏற்படுகிறது. அவருக்கு வழங்கப்படும் மிகப்பெரும் வெகுமதி இறைவனின் வார்த்தையாகும். அது பனிமூட்டம் ஏதுமின்றி பிரகாசிக்கும் நிலாவொளி போல சந்தேகத்தின் கலப்பு ஏதுமின்றி அவரது உள்ளத்தின் மீது இறங்குகிறது. அது பெருமகிழ்ச்சியின் உணர்வை தன்னுள் கொண்டவாறு மனநிறைவையும், ஆறுதலையும், பாதுகாப்பையும் அவருக்கு வழங்குகிறது. இறைவனுடன் உரையாடுவதற்கும் இறையறிவிப்பிற்கும் (வஹீ) இடையிலான வித்தியாசம் என்னவெனில் இறையறிவிப்பு என்பது ஒரு வற்றாத நீரூற்று போன்று இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடம் தொடர்ந்து ஓடிக் கொண்டிருப்பதாகும். அவர்கள் பேசுவதும், பார்ப்பதும், கேட்பதும் தூய ஆவியினாலே (ரூஹுல் குத்தூஸ்) ஆகும். அவர்களின் அனைத்து எண்ணங்களும் ரூஹுல் குத்தூஸின் சுவாசத்தினாலேயே பிறக்கின்றன. உண்மையில் அவர்கள் திருக்குர்ஆனின் இந்த வசனத்தின் பிரதிபிம்பம் ஆவார்கள்.

அவர் (தமது சொந்த) விருப்பத்தின்படி பேசவில்லை. இது (இறைவனிடமிருந்து) அறிவிக்கப் பெற்ற வஹீயே ஆகும். (53:4-5)

ஆனால் இறைவனுடன் உரையாடுதல் என்பது வேறொன்றாகும். இது என்னவெனில் அவர்களின் மீது இறைவனின் வார்த்தை சொற்களைக் கொண்ட இறையறிவிப்பின் வடிவில் இறங்குகிறது. ஒரு நண்பன் தனது நண்பனிடமிருந்து கேட்பதைப் போன்று அவர்கள் தமது கேள்விகளுக்கான பதிலை இறைவனிடமிருந்து பெறுகின்றனர். பிரியமிக்க ஒரு வானவர் மூலம் தெரிவிக்கப்படும் மகிமைக்குரிய இறைவனின் ஒரு சிறப்புமிகு தோற்றம் என்று மட்டுமே நாம் இதனைப் பற்றிக் கூற முடியும். இதன் நோக்கம் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டதை குறித்து அறிவிப்பதற்காக அல்லது ஒரு புதிய அல்லது இரகசிய விஷயத்தை அல்லது எதிர்காலத்தில் நிகழவிருக்கும் ஏதாவது ஒன்றைக் குறித்து உணர்த்து -வதற்காக அல்லது ஏதாவது ஒன்று குறித்து இறைவனின் திருப்தியை அல்லது அதிருப்தியை தெரிவிப்பதற்காக அல்லது ஏதாவது ஒரு விஷயத்தில் நிச்சய உறுதியை உருவாக்குவதற்காக இருக்கலாம். இது புரிந்துணர்வையும், மனநிறைவையும் ஏற்படுத்துவதற்காக உரையாடலின் வடிவில் வெளிப்படும் இறைவனின் குரலாகும். இதனைக் குறித்து, அருட்கள் நிறைந்த சுவைமிகு வார்த்தைகளாக உணரப்படுகிற இறைவன் புறமிருந்து வெளிப்படும் ஒரு குரலே என்று கூறுவதை தவிர அதிகப்படியாக நாம் ஒன்றும் கூற முடியாது. இது எண்ணங்களின் தூண்டுதலாகவோ அல்லது பிரதிபலிப்பாகவோ அல்லது மனதின் வேறெந்த முறையிலான தலையீடாகவோ அல்லாமல் இறை தோற்றத்தாலும் இறை மகத்துவத்தாலும் வாழ்த்தப்பட்ட ஒன்றாக இருக்கிறது. (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம், ரூஹானீ கஸாயின், தொகுதி 5 பக்கம் 226-233)

இஸ்லாம் மட்டுமே உண்மையான மார்க்கம் என நான் நம்புகிறேன். பிற அனைத்து மார்க்கங்களையும் பொய்யின் மூட்டைகளாகவே கருதுகிறேன். இறைவனோடு உரையாடுவதிலும், துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர் மட்டுமே பெறக்கூடிய, வேறெவராலும் பெற முடியாத நிலையை நான் பெற்றுள்ளேன். இந்த நிலையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான நேசத்தின் காரணமாகவே நான் அடைந்தேன். இந்துக்களும், கிறித்தவர்களும், மற்றவர்களும் தமது பொய்யான கடவுள்களிடம் மரணிக்கும் வரை பிரார்த்தனை செய்தாலும் அடைய முடியாது.

நான் இறைவனின் வார்த்தைகளை செவியுறுகிறேன். மற்றவர்கள் அதனை ஒரு தத்துவமாகவே நம்புகின்றனர். எனக்கு காட்டப்பட்டதும், கூறப்பட்டதும், உணர்த்தப்பட்டதும் இஸ்லாம் மட்டுமே உலகில் உண்மையான மார்க்கம் என்பதாகும். மேலும் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களைப் பின்பற்றியதன் அருளின் விளைவாகவே இவை அனைத்தையும் நான் பெற்றுக் கொண்டதாக எனக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு நிகரான ஒன்றை வேறெந்த மார்க்கத்திலும் அடைந்து விட முடியாது. ஏனெனில் அவை அனைத்தும் பொய்யானவையாகும். (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 5 பக்கம் 275-276)

இறைவனுக்கு ஆயிரம் நன்றிகள்! அவன் நமக்கு வழங்கியுள்ள மார்க்கம் இறைஞானத்தையும் இறையச்சத்தையும் பெற்றுத் தரக்கூடிய எத்தகைய வழி எனில், அதற்கு நிகரான ஒன்று எந்த காலத்திலும் இருந்ததில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஆயிரக்கணக்கான அருட்கள் உண்டாகட்டும்! அன்னாரின் மூலமே நாம் இந்த மார்க்கத்தில் நுழைந்துள்ளோம். அன்னாரின் உற்ற தோழர்கள் மீது ஆயிரமாயிரம் இறை கருணைகள் இறங்கட்டும்! அவர்களே தமது இரத்தத்தைக் கொண்டு இந்த தோட்டத்திற்கு நீர்ப்பாய்ச்சினார்கள்.




இஸ்லாம் எத்தகைய ஓர் அருளுக்குரிய இறைவனை காட்டுகிற மார்க்கம் எனில், ஒருவர் இதனை உண்மையாகப் பின்பற்றினால், மகத்துவமிக்க இறைவனின் தூய வார்த்தை -யாகிய திருக்குர்ஆனின் போதனைகள், வழிகாட்டல்கள், அறிவுரைகளின்படி செயல்பட்டால் அவர் இவ்வுலகிலேயே இறைவனைக் காண்பார். ஆயிரக்கணக்கான திரைகளுக்கு அப்பால் உலகில் பார்வையை விட்டும் மறைந்திருக்கின்ற இறைவனை அடையாளம் காண்பதற்கு திருக்குர்ஆனின் போதனைகளைத் தவிர வேறெந்த வழியும் இல்லை. திருக்குர்ஆன் அறிவின் மூலமாகவும் இறைஅடையாளங்கள் மூலமாகவும் மகத்துவமிக்க இறைவன் பக்கம் மிகவும் எளிதான முறையில் வழிகாட்டுகிறது. இது தன்னுள் ஓர் அருளையும் ஓர் ஈர்ப்பு சக்தியையும் பெற்றுள்ளது. இது இறைவனையே எந்நேரமும் தேடுபவரை இறைவன் பக்கம் இழுத்து வருகிறது. அவருக்கு ஒளியையும், ஆறுதலையும், மனநிறைவையும் வழங்குகிறது. திருக்குர்ஆன் மீது உண்மையிலேயே நம்பிக்கை கொண்டிருக்கின்ற ஒருவர், தத்துவ ஞானிகளைப் போல் வியத்தகு இந்த பிரபஞ்சத்திற்கு ஒரு படைப்பாளன் இருக்க வேண்டும் என்று மட்டுமே சிந்திப்பதில்லை. மாறாக, அவர் ஒரு தனிப்பட்ட நுண்ணறிவைப் பெற்று, ஒரு தூய காட்சியின் மூலம் கவரவிக்கப்பட்டு, அந்த படைப்பாளன் உண்மையிலேயே இருக்கிறான் என்பதை நிச்சய உறுதியின் கண்களால் கண்டு கொள்கிறார். இந்த தூய வார்த்தையின் ஒளி வழங்கப்பட்டவர் அறிவை மட்டுமே சார்ந்து நிற்பவர்களைப் போன்று, இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணை இல்லையென்றும் யூகம் கொள்வதில்லை. மாறாக, அவரது கையைப் பிடித்து அவரை இருளை விட்டும் வழிநடத்திச் செல்லும் நூற்றக்கணக்கான பிரகாசமான இறைஅடையாளங்கள் மூலமாக, இத்தகைய

மனிதர், இறைவன் அவனது இருப்பிலும், பண்புகளிலும் இணையற்றவன் என்பதை தானே அறிந்து கொள்கிறார். இறைவன் இத்தகைய ஏகனாவான் என்ற தனது நம்பிக்கையை அவரால் உலகிற்கு நிரூபித்து காட்ட முடியும். இறை ஏகத்துவத்தின் மகிமை அவரது உள்ளத்தில் எந்த அளவுக்கு நிரம்பி விடுகிறதென்றால், இறை நாட்டத்திற்கு எதிராக இந்த முழு உலகையும் அவர் ஒரு செத்துப்போன பூச்சியைப் போன்று ஒன்றுமற்றதாகவே கருதுகிறார். (பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5, ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 25-26)

## இஸ்லாத்தில் தொடரும் நற்பேறுகள்:

ஓர் உண்மையான மார்க்கத்தின் இறைவன் எந்த அளவுக்கு பகுத்தறிவுக்கும் இயற்கையின் ஒளிக்கும் இணக்கமாக இருக்க வேண்டும் எனில், பகுத்தறிவைப் பெற்றுள்ள; ஆனால் எந்த ஓர் இறைவேதத்திலும் நம்பிக்கை கொள்ளாத மக்களுக்கும் அவனது இருப்பு நிரூபிக்கத்தக்கதாக இருக்க வேண்டும். அவனிடம் பலவந்தத்தின் சாயலோ செயற்கைத்தனத்தின் சாயலோ இருக்கக் கூடாது. திருக்குர்ஆன் கூறுகின்ற இறைவன் இத்தகைய முழுமையான பண்பினை உடையவனாவான். பிற மார்க்ககங்களைப் பின்பற்றுபவர்கள், ஒன்று கிறித்தவர்களைப் போன்று உண்மையான இறைவனை கைவிட்டு விட்டனர். அல்லது யூதர்களைப் போன்று முறையற்ற கீழான பண்புகளை இறைவனுக்கு கற்பித்து விட்டனர். அல்லது ஆரியர்களைப் போன்று அவனது பண்புகளை இழந்தவனாக அவனை ஆக்கி விட்டனர். இஸ்லாத்தின் இறைவன் இயற்கை சட்டம் என்ற கண்ணாடி வழியாக காணப்படுபவனும், இயற்கை என்னும் புத்தகத்தில் தோற்றமளிப்பவனுமாவான். இஸ்லாம் ஒரு புதிய இறைவனை வழங்கவில்லை. மனித உள்ளமும், மனிதனின் மனசாட்சியும், வானமும், பூமியும் வழங்குகின்ற அதே இறைவனையே இஸ்லாம் வழங்குகிறது.



ஓர் உண்மையான மார்க்கத்தின் மற்றொரு பண்பு என்னவெனில், அது மரணித்து விட்ட ஒரு சமய கோட்பாடாக ஆகி விடக் கூடாது. அதன் ஆரம்ப காலத்தில் அதில் வளர்த்து உருவாக்கப்பட்ட நற்பேறுகளும் மேன்மைகளும் மனிதகுல நலனின் முன்னேற்றத்திற்காக உலகின் இறுதி வரை நிலைத்து நிற்க வேண்டும். அதன் புத்தம் புதிய அடையாளங்கள் அதன் கடந்த கால அடையாளங்களை மெய்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அதன் உண்மையின் ஒளியை ஒரு பழங்கதையாக மாறிவிடுவதற்கு அனுதிக்கக் கூடாது. நான் நீண்ட காலமாகவே இதனைக் குறித்து எழுதி வருகிறேன். அதாவது நமது தலைவரும், எஜமானரும், தேர்ந்தெடுக்கப்பட்டவருமாகிய முஹம்மத் (ஸல்) அவர்களின் நபித்துவ வாதமும், அவர்கள் அடையாளங்கள் வடிவில் முன்வைத்த தூய சான்றுகளும் இஸ்லாத்தில் இன்று வரை தொடர்கின்றன. அன்னாரைப் பின்பற்றுபவர்களுக்கு அவை வழங்கப்படுகின்றன. அதன் மூலம் அவர்கள் புரிந்துணர்வின் முழுமையான நிலையை அடைந்து உயிருள்ள இறைவனை நேருக்கு நேர் காண முடியும்.

இயேசுவின் அடையாளங்களாகக் கூறப்படுபவை வெறும் கதைகளே ஆகும். அவற்றை எங்கும் காண முடிவதில்லை. எனவே மரணித்தவரை வணங்குமாறு போதிக்கும் இந்த மார்க்கம், அதன் இறைவனைப் போன்றே மரணித்து விட்ட ஒன்றேயாகும். ஒரு மெய்கூற்று பழங்கதைகளைக் கொண்டிருக்க முடியாது. ஒவ்வொரு சமுதாயத்திடமும் அற்புதங்கள் என்றும் அதிசயங்கள் என்றும் கூறப்படும் பழங்கதைகளின் குவியல் இருக்கின்றது. இஸ்லாம் மட்டுமே குறைபாடுடைய முழுமையற்ற ஆறுதலை தரும் வெறும் கற்பனைகளையும், கதைகளையும் முன்வைப்பதில்லை. மாறாக, அது உயிருள்ள அடையாளங்களைக் கொண்டு உண்மையைத் தேடுபவர்களுக்கு மனநிறைவைத் தருகிறது. உண்மையைத் தேடும் ஒருவர் மரணித்து விட்ட ஒருவரை உணர்வற்ற முறையில் வணங்குவதில் திருப்தி அடைந்து விடக் கூடாது. அதைப் போன்று தகுதியற்ற கதைகளைக் கண்டு மனம் தளர்ந்து விடவும் கூடாது. மிகச் சிறந்ததை வாங்குவதற்காகவே உலகம் என்ற இந்த சந்தைக்கு நாம் வந்துள்ளோம். நம்முடைய நம்பிக்கையை பொய்யானவற்றைக் கொண்டு நாம் வீணாக்கி விடக் கூடாது. உயிருள்ள நம்பிக்கை எதுவென்றால் அதன் மூலம் உயிருள்ள இறைவனை நாம் காண முடியும். உயிருள்ள இறைவன் எத்தகையவன் என்றால் அவன் நேரடியாக நம்முடன் உரையாட முடியும். அல்லது குறைந்தப்பட்சம் அவன் நேரடியாக உரையாடுகின்ற ஒருவருடன் நம்மை சேர்த்து விட முடியும். நான் முழு உலகிற்கும் இந்த நற்செய்தியைக் கூறிக் கொள்கிறேன். அது என்னவெனில், இஸ்லாத்தின் இறைவன் இத்தகைய உயிருள்ள இறைவன் ஆவான். எவற்றுடன் எவருமே பேச முடியாதோ அவை மரணித்தவை. அவை இறைவன் அல்ல. அவற்றின் அடையாளங்களை எவரும் இன்று காண முடியாது. எவருடைய இறைவன் மரணித்தவனோ அவர் ஒவ்வொரு துறையிலும் இழிவிற்காளாகி அவமானப்படுவதுடன் எவ்வகையிலும் உதவி செய்யப்பட மாட்டார்.

இந்த அறிவிப்பைச் செய்வதில் எனது நோக்கம் என்னவெனில், உண்மையான மார்க்கம் மாறாதது என்பதை உணர்த்துவதற்காகவே ஆகும். எவ்வாறு அதன் ஆரம்பத்தில் இருந்ததோ, அவ்வாறே அது அதன் இறுதியிலும் இருக்கும். ஓர் உண்மையான மார்க்கம் ஒரு காய்ந்த கதையாக ஒருபோதும் ஆகாது. இஸ்லாம் ஓர் உண்மையான மார்க்கம் ஆகும். இஸ்லாத்தின் உண்மையைக் காட்டுவதற்காக நான் ஒவ்வொருவரையும் - கிறித்தவர்களையும், ஆரியர்களையும்,

யூதர்களையும், பிராமணர்களையும், அழைக்கிறேன். உயிருள்ள இறைவனைத் தேடுபவர் அவர்களில் எவரும் உண்டா? நாங்கள் மரணித்தவரை வணங்குவதில்லை. எமது இறைவன் உயிருள்ளவன் ஆவான். அவன் எமக்கு இல்ஹாம் மூலமும், வஹி மூலமும் உதவி செய்கிறான். உண்மையிலேயே உண்மையைத் தேடும் ஒரு கிறித்தவர் இருந்தால் கூட அவர் எம்முடைய உயிருள்ள இறைவனையும் அவரது மரணித்துவிட்ட இறைவனையும் ஒப்பிட்டு பார்க்கட்டும். இந்த சோதனைக்கு 40 நாட்கள் கால அவகாசம் போதுமான ஒன்றேயாகும். (மஜ்முஆ இஷ்திஹாராத் தொகுதி 2 பக்கம் 310-312)

## இஸ்லாத்தின் உண்மைக்கான நீடித்த அடையாளங்கள்:

இஸ்லாத்தின் பண்புகளாக நாம் எடுத்துரைத்தவற்றை நிரூபிப்பதற்காக கடந்த காலத்தை மட்டுமே பார்க்க வேண்டிய நிலையோ, நமக்கு ஏற்படவில்லை. கல்லறைகளின் சிதிலங்களை மட்டுமே சுட்டிக் காட்ட வேண்டிய நிலையோ நமக்கு ஏற்படவில்லை. இஸ்லாம் ஒரு மரணித்து விட்ட மார்க்கம் அல்ல. அவ்வாறாயின் அதன் அருள்கள் எல்லாம் முடிந்து போய் விட்டனவென்றும், தற்போது எதுவும் எஞ்சி இருக்கவில்லை என்றும் கூறலாம். இஸ்லாத்தின் முதன்மையான பண்பு எதுவென்றால் அதன் அருள்கள் எப்போதும் அதன் உடனேயே இருக்கின்றன. அது கடந்த காலத்தைப் பற்றி மட்டும் பேசவில்லை. மாறாக நிகழ்காலத்திலும் அது அருட்களை வழங்குகிறது. அருட்கள் மற்றும் இறைஅடையாளங்களின் தேவை உலகிற்கு எப்போதுமே இருக்கின்றது. கடந்த காலத்தில் அவை தேவைப்பட்டன. தற்போது அவற்றின் தேவை இல்லை என்பதல்ல.

பார்வையற்ற ஒருவரைப் போன்று பலவீனமாகவும், ஆதரவற்றவாறும் பிறந்துள்ள மனிதனுக்கு இறைஆட்சியைக் குறித்து ஏதாவது தெரிந்து கொள்ள வேண்டிய தேவை உள்ளது. அவன் நம்புகிற இறைவனின் இருப்பு குறித்தும் அவனது ஆற்றல் குறித்தும் சில அடையாளங்களையாவது காண வேண்டிய தேவை உள்ளது. கடந்த காலத்தின் அடையாளங்கள் பின்வரும் காலத்திற்குப் போதுமானவை அல்ல. ஏனெனில் கேள்விப்புலனும் பார்வைப்புலனும் சமம் அல்ல. காலப்போக்கில் கடந்த கால நிகழ்வுகள் கதைகளாக மாறி விடுகின்றன. ஒவ்வொரு புதிய நூற்றாண்டும் ஒரு வகையில் ஒரு புதிய உலகை ஆரம்பிக்கிறது. எனவேதான் இஸ்லாத்தின் இறைவன், அவனேதான் உண்மையான இறைவன். ஒவ்வொரு புதிய உலகிற்கும் புதிய அடையாளங்களை வெளிப்படுத்துகிறான். ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும், குறிப்பாக, எந்த நூற்றாண்டு மார்க்கத்தை விட்டும், நேர்மையை விட்டும் வெகுதூரம் விலகிப் போய் பல்வேறு இருள்களால் சூழப்பட்டுள்ளதோ அதே நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒரு பிரதிநிதித்துவ நபியை இறைவன் எழுப்புகிறான். இவர் முன்னர் தோன்றிய நபியின் பிரதிபிம்பமாவார். எந்த நபியைப் பின்பற்றியவாறு இவர் தோன்றியுள்ளாரோ அந்த நபியின் சிறப்புகளை இவர் செயல்ரீதியாக உலகில் நிரூபித்துக் காட்டுகிறார். உண்மையின் மூலமும், உண்மைத்தன்மையை வெளிப்படுத்திக் காட்டுவதன் மூலமும், பொய்மையை முறியடித்துக் காட்டுவதன் மூலமும் எதிரிகளின் தவறுகளை அவர்களுக்கு உணர்த்துகிறார். (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 5 பக்கம் 245-247)

உண்மையான மார்க்கத்தின் அடையாளம் என்னவெனில் அதன் போதனைகளின் மூலமாக முஹத்தத் என்ற தகுதியை அடைந்த, இறைவன் முகம்முகமாய் பேசுகிற நல்லடியார்கள் அதில் தோன்றிக் கொண்டேயிருக்க வேண்டும். இஸ்லாத்தின் உண்மைக்கு முதலாவதும் முதன்மையானதுமான அடையாளம் என்னவெனில் இத்தகைய நல்லடியார்களை இஸ்லாம் எல்லாக் காலத்திலும் தோற்றுவித்துள்ளது. அவர்களுடன் இறைவன் பேசுகிறான். அவர்கள் மீது மலக்குகள் இறங்குகின்றனர். நீங்கள் அஞ்சவும் வேண்டாம். கவலைப்படவும் வேண்டாம். இது மட்டுமே ஓர் உண்மையான, உயிருள்ள, ஏற்றுக் கொள்ளத்தக்க மார்க்கத்திற்கான சோதனையாகும். இந்த ஒளி இஸ்லாத்தில் மட்டுமே காணப்படுகிறது என்பதையும், கிறித்தவத்தில் காணப்படவில்லை என்பதையும் நாம் அறிவோம். (ஹுஜ்ஜத்துல் இஸ்லாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 6 பக்கம் 43)




நமது தலைவரும் எஜமானருமாகிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலந்தொட்டு இந்நாள் வரைக்கும் ஒவ்வொரு நூற்றாண்டிலும் இறையடியார்கள் தோன்றியுள்ளனர் என்றும் மகத்துவமிக்க இறைவன் அவர்களின் மூலமாக இறையடையாளங்களைக் கொண்டு மக்களுக்கு வழிகாட்டினான் என்றும் உண்மையைத் தேடும் ஒவ்வொருவருக்கும் நம்மால் நிரூபித்துக் காட்ட முடியும். சய்யித் அப்துல் காதிர் ஜீலானி, அபுல்ஹஸன் கார்கானி, அபு யாஸித் பிஸ்தாமி, ஜுனைத் பாக்தாதி, மொஹிய்யுத்தீன் இப்னு அரபி, துன்னூன் மிஸ்ரி, முயினுத்தீன் சிஸ்தி அஜ்மீரி, குத்புத்தீன் பக்தியார்ஹாகி, ஃபரிதுத்தீன் பாக்பட்னி, நிஜாமுத்தீன் தெஹ்லவி, ஷா வலியுல்லாஹ் தெஹ்லவி, ஷேக் அஹ்மத் ஸர்ஹின்தி (ரலியல்லாஹு அன்ஹும்) போன்றவர்கள் அவர்களில் சிலர் ஆவர். இத்தகையவர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் உள்ளது. அவர்களைக் குறித்த ஏராளமான அசாதாரணமான நிகழ்வுகள் அறிஞர்களின் நூல்களில் எழுதப்பட்டுள்ளன. எந்த அளவுக்கெனில் மிகவும் காழ்ப்புணர்ச்சி கொண்ட எதிரி கூட இவர்கள் அசாதரணமான அடையாளங்களையும் அற்புதங்களையும் காட்டியுள்ளனர் என்பதை ஏற்றுக் கொள்வார். கடந்த காலத்தைக் குறித்து முடிந்தவரை ஆராய்ச்சி செய்து பார்த்ததில் இந்த முடிவுக்கு நான் வந்துள்ளேன் என்று

உண்மையிலேயே தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது, இந்த உம்மத்தில் தோன்றிய அவ்லியாவின் மூலமாக இஸ்லாத்தின் உண்மைக்கும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைக்கும் ஆதரவாக வெளிப்பட்ட இறையடையாளங்களின் எண்ணிக்கைக்கும் நிகரான ஒன்றை மற்ற மார்க்கங்களின் வரலாற்றில் காண முடியாது. இஸ்லாம் மார்க்கம் மட்டுமே இறையடையாளங்கள் மூலமாக வளர்ச்சி பெற்றுள்ளது. அதன் எண்ணிலடங்கா ஒளிகளும், அருள்களும், மகத்துவமிக்க இறைவனின் இருப்பை, அவன் மிக அருகில் தோன்றுவது போன்று நிரூபித்துக் காட்டியுள்ளது.

எந்த ஒரு காலகட்டத்திலும் இறையடையாளங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் இஸ்லாம் வெட்கத்திற்கு ஆளாகியதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்களின் இந்தக் காலத்திலும், விரும்பினால் நீங்கள் கூட, இஸ்லாத்திற்கு ஆதரவாக வெளிப்படும் அடையாளங்களின் சாட்சிகள் ஆகலாம். உண்மையாகவே கூறுங்கள். உங்களின் காலத்தில் இஸ்லாத்திற்கு ஆதரவான அடையாளங்களை நீங்கள் காணவில்லையா? இது போன்ற சான்றை தருகின்ற வேறு எந்த மார்க்கமாவது உலகில் இருக்கிறதா? உண்மையில் இந்த சான்றுகள் தாம் கிறித்துவ பாதிரிகளின் முதுகை உடைத்துள்ளன. அவர்கள் எவரை கடவுளாகக் கருதுகின்றனரோ அவருக்கு ஆதரவாக பொருளற்ற சில கதைகளும், பொய்யான கருத்துகளையும் தவிர வேறொன்றுமில்லை.

எவரை அவர்கள் மறுக்கின்றனரோ, அந்த நபி (ஸல்) அவர்களின் உண்மைக்கான அடையாளங்கள் கொட்டுகின்ற மழையைப் போன்று இக்காலத்தில் வெளிப்படுகின்றன. கடந்த காலங்களைப் போன்றே இக்காலத்திலும் உண்மையைத் தேடுபவர்களுக்கு இறையடையாளங்களின் வாசல்கள் திறந்த வண்ணமே உள்ளன. முன்பைப் போன்றே இப்பொழுதும் உண்மையின் மீது பசி கொள்பவர்களுக்கு அருட்கொடைகளின் மாபெரும் விருந்து தயாராக உள்ளது. முன்பிருந்ததைப் போன்றே இப்பொழுதும் உயிருள்ள மார்க்கம் இருக்கிறது. ஓர் உயிருள்ள மார்க்கத்தின் பின்னால் எப்பொழுதும் உயிருள்ள இறைவனின் கை இருக்கும். இத்தகைய ஒரு மார்க்கமே இஸ்லாம் ஆகும். (கிதாபுல் பரிய்யா, ரூஹானீ கஸாயின் தொகுதி 13 பக்கம் 91-92)

எவராவது இப்படி ஒரு வினா எழுப்பலாம். அதாவது, நூற்றுக்கணக்கான பொய்யான மார்க்கங்கள் ஆயிரக்கணக்-கான வருடங்கள் தழைத்து வந்திருக்கின்றனவே, அவற்றின் ஆரம்பம் எப்படியும் பொய்வாதிகளைக் கொண்டுதானே இருந்திருக்க முடியும் என்று கேட்கலாம். இதற்கு நமது பதில் இதுவாகும். நம்மைப் பொறுத்தவரை பொய் வாதம் என்பது ஒருவருக்கு இறையறிவிப்பு எதுவும் வராதிருக்க, அவர் ஓரிரு வசனங்களையோ அல்லது ஒரு நூலையோ தானே இயற்றி அதனை தான் பெற்றுக் கொண்ட இறையறிவிப்பு என வாதம் செய்வதாகும். இப்படிப்பட்ட ஒரு பொய்வாதி தழைத்ததில்லை என்பதை முழுமையான ஆய்வின் அடிப்படையில் திட்டவட்டமாக நம்மால் கூற முடியும். மகத்துவமிக்க இறைவனுக்கு எதிராக பொய் வாதம் செய்த குற்றத்திற்கு ஆளானவர் விரைவில் அழிக்கப்படுவார் என இறைவேதம் சாட்சி பகிர்கிறது. இதே சாட்சியம் தவ்ராத்திலும், இஞ்சீலிலும், திருக்குர்ஆனிலும் கூறப்பட்டுள்ளனவென்று நாம் ஏற்கனவே கூறியுள்ளோம்.

இன்று நாம் உலகில் பார்க்கின்ற இந்துக்கள், ஜொராஸ்டியர்கள் போன்றவர்களின் பொய்யான மார்க்கங்கள், பொய்வாதிகளின் அமைப்புகள் அல்ல. உண்மை என்னவெனில், அவற்றைப் பின்பற்றுபவர்கள் தமது தவறுகளின் விளைவாக தற்போதைய தவறான கொள்கைகளைப் பின்பற்றுகின்றனர். ஒரு பொய்வாதியால் உருவாக்கப்பட்ட தன்னை ஒரு இறைவேதம் என தெளிவாக வாதம் புரிந்து, ஒரு சமுதாயத்தால் கண்ணியத்துடன் போற்றப்படுகின்ற எந்த ஒரு நூலையும் நீங்கள் காட்ட முடியாது. ஆனால் ஒரு இறைவேதம் தவறாக பொருள் கொள்ளப்படுவதற்கான சாத்தியம் உள்ளது. ஓர் அரசு அதிகாரி என போலியாக கூறித் திரியும் ஒரு நபரை அரசாங்கம் ரோஷத்துடன் பிடித்துக் கொள்கிறது. இவ்வாறிருக்க, தனது பெருமையைக் குறித்தும், தனது அரசாட்சியைக் குறித்தும் ரோஷம் கொள்கிற இறைவன், ஒரு பொய்வாதியை ஏன் பிடிக்க மாட்டான்? (அஞ்சாமே ஆத்தம், ரூஹானீ கஸாயின், தொகுதி 11 பக்கம் 63-64 அடிக்குறிப்பு)

(தொடரும்...)

**ஒவ்வொரு நூற்றாண்டிலும் இறையடியார்கள் தோன்றியுள்ளனர். அவர்களுள் சிலர்:**

செய்யத் அப்துல் காதிர் ஜீலானி (ரலி)
அபுல் ஹஸன் கார்கானி (ரலி)
அபு யாஸித் பிஸ்தாமி (ரலி)
ஜுனைத் பாக்தாதி (ரலி)
மொஹிய்யுத்தீன் இப்னு அரபி (ரலி)
துன்னூன் மிஸ்ரி (ரலி)
முயினுத்தீன் சிஸ்தி அஜ்மீரி (ரலி)
குத்புத்தீன் பக்தியார்ஹாகி (ரலி)
ஃபரிதுத்தீன் பாக்பட்னி (ரலி)
நிஜாமுத்தீன் தெஹ்லவி (ரலி)
ஷா வலியுல்லாஹ் தெஹ்லவி (ரலி)
ஷேக் அஹ்மத் ஸர்ஹிந்தி (ரலி)




நார்வே நாட்டின் லஜ்னா உறுப்பினர்களின் ஒரு குழு ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லா -ஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களைச் சந்திப்பதற்காக யு.கே இஸ்லாமாபாத் வந்திருந்தனர். அன்பிற்குரிய ஹுஸூர் அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அதற்கான பதில்களும்:

ஒரு சிறுமி: ஹுஸூர்! நாம் ஏன் அஹ்மதியாக இருக்கிறோம்?

ஹுஸூர் கூறினார்கள்: அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதில் என்ன நன்மை இருக்கிறது என ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். நாம் அடி உதையும் வாங்குகிறோம். மக்கள் நம்மை தவறாக நினைக்கிறார்கள். நாம் நார்வேயில் வாழ்பவர்களானாலும், ஸ்வீடனில் வாழ்பவர்களானாலும் வேறு எந்த நாட்டவர்களானாலும் மக்கள் நம்மைத் தவறாகவே கூறுகிறார்கள். பிறகு, அஹ்மதியாக இருப்பதன் பயன் என்ன? நாம் ஏன் அஹ்மதியாக இருக்கிறோம் என்பதை நாம் அறிந்திருக்கும்போதுதான் அஹ்மதியாக இருப்பது நமக்கு பயனளிக்கும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னறிவிப்பு நிறைவேறியது. மேலும், நாம் அதனை ஏற்றவர்களாக இருக்கிறோம். எனவேதான் நாம் அஹ்மதிகளாக இருக்கிறோம். அதற்குப் பிறகு நம்முடைய செயல்கள் எவ்வாறு இருக்க வேண்டும்? இஸ்லாத்தின் போதனைகள்படி நாம் எப்படி செயல்பட வேண்டும்? நாம் அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமையை எவ்வாறு செலுத்த வேண்டும்? கடமையான ஐவேளை தொழுகைகளை நாம் எவ்வாறு நிறைவேற்ற வேண்டும்? திருக்குர்ஆனில் எழுதப்பட்டுள்ள கட்டளைகளுக்கு ஏற்ப எவ்வாறு நாம் செயல்பட வேண்டும்? மேலும் அவற்றை எவ்வாறு தேட வேண்டும்? என்று பார்க்க வேண்டும்.

அப்போதுதான் நாம் அஹ்மதிகளாக இருப்பது நமக்குப் பயனளிக்கும். அவ்வாறில்லையெனில் அஹ்மதிகள் என்று வெறுமனே முத்திரை குத்திக் கொள்வதில் எந்தப் பயனும் இல்லை. (சரியா!) எனவே, ஒவ்வொரு சிறுமியும், ஒவ்வொரு பெண்ணும் நாம் ஏன் அஹ்மதிகளாக இருக்கிறோம். நம்முடைய பணிகள் என்னென்ன? நாம் அந்தக் கடமைகளை எப்படி நிறைவேற்றுவது என்று சிந்திக்க வேண்டும்? மேலும் நமது நாட்டில் அஹ்மதிய்யத்தைப் பரப்புவதற்கும், அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை மற்றவர்கள் வரை எட்டவைப்பதற்கும் எப்படிப்பட்ட முன்மாதிரியை நாம் நிலைநாட்ட வேண்டும் என்பது குறித்து சிந்திக்க வேண்டும்.

பிறகு, இஸ்லாத்தின் உண்மையான போதனை உலகிற்குத் தெளிவாகும் பொருட்டு, உலகம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கொடியின் கீழ் வரும் பொருட்டு, இந்த சமூதாயத்திலிருந்து மக்களை எப்படி அஹ்மதிய்யத்தில் இணைக்கலாம் என்று சிந்திக்க வேண்டும். இது நமது குறிக்கோள் ஆகும். இதை நாம் நிறைவேற்ற வேண்டும். ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் சிறுமியானாலும் பெரிய வயது பெண்களானாலும் இதை ஒவ்வொருவரும் புரிய வேண்டும். எனவே, இதற்காகத்தான் லஜ்னா அமைப்பு நிறுவப்பட்டது. இதற்காகத்தான் லஜ்னாவின் பல்வேறு துறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவேதான் தர்பிய்யத், தப்லீக் மற்றும் இதர துறைகள் உள்ளன. இவற்றின் பக்கம் கவனம் செலுத்துங்கள். மேலும் மக்கள் உங்கள் முன்மாதிரியைக் கண்டு, உங்களது சொற்களைச் செவியுற்று இஸ்லாத்தின் பக்கம் திரும்பும் அளவிற்கு, இஸ்லாத்தின் பக்கம் அவர்களது கவனம் ஈர்க்கப்படும் அளவிற்கு உங்களிடம் மாற்றத்தை ஏற்படுத்துங்கள். பிறகு அஹ்மதிய்யத் உங்களது நாட்டில் பெரும்பாலும் பரவி விடும் அந்த நாளை எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்குக் காட்டுவான்.

இதுவே லஜ்னாவின் குறிக்கோளாகும். மேலும், இந்த நோக்கத்தைக் கையில் எடுத்துக் கொண்டு நீங்கள் முன்னேற வேண்டும். உங்களால் இந்த குறிக்கோளை நிறைவேற்ற முடியுமானால் மிகவும் நல்ல விஷயம். நிறைவேற்றவில்லை என்றால் உங்கள் நிலையை மறு ஆய்வு செய்திடுங்கள். இப்போது நாம் என்னவாக இருக்கிறோம், என்னவாக ஆக வேண்டும் என மதிப்பிடுங்கள்.

ஹஸ்ரத் அமீருல் மு.்.மினீன் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் லஜ்னா உறுப்பினர்களுக்கு அவர்களது பயணத்தின் நோக்கம் குறித்தும் அறிவுரை கூறினார்கள்.

நீங்கள் இங்கு தங்குங்கள். லஜ்னாவின் பிரதிநிதி -களையும் சந்தியுங்கள். தொழுங்கள். துஆக்கள் செய்யுங்கள். உங்களுடைய நிலைமைகளை மேம்படுத்த உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் திரும்பிச் செல்லும் போது, நீங்கள் இங்கு வந்தபோது இருந்ததை விட உங்களது நிலைமைகள் உயர்ந்திருக்க வேண்டும். (சரியா!) இது நடந்தால்தான் பயன் கிடைக்கும்.

சரி தானே? நான் கூறுவது உனக்குப் புரிகிறதா? நீ ஒரு நல்ல அஹ்மதி சிறுமியாக ஆக வேண்டும். அப்போதுதான் அஹ்மதிய்யத் என்றால் என்ன? இதுதான் உண்மையான இஸ்லாம் என்று உன்னால் மற்றவர்களுக்கு சொல்ல முடியும். (சரியா!) பிறகு, மக்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் கவனம் பிறக்கும். அது இல்லாமல், என் தாய் தந்தை அஹ்மதியாக இருக்கிறார்கள்; அதனால் நானும் அஹ்மதியாக இருக்கிறேன் என்று இருக்கக் கூடாது.

லஜ்னா உறுப்பினர் ஒருவர் கிலா.்.பத்தே அஹ்மதிய்யாவிற்குத் தொண்டு செய்ய எப்போதும் தாம் அர்ப்பணிப்பு உணர்வுடன் இருக்க துஆ செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

ஹுஸூர் கூறினார்கள்: அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை, இஸ்லாத்தின் தூதுச் செய்தியை நீங்கள் பரப்ப வேண்டும் என்பதே அசல் விஷயம் ஆகும். உங்களது குறிக்கோள் ஆகும். எனவே உங்களது முன்மாதிரியை நிலைநாட்டுங்கள். உலகத்தின் பக்கம் மட்டும் சாய்ந்திருக்கா -தீர்கள். நார்வேயிற்கு வந்து நாம் உலகத்துக்குப் பின்னால் செல்லக் கூடாது. உலகமோ கிடைத்தே விடும். மார்க்கத்தைத் தேடுவது, அல்லாஹ்வைத் தேடுவதுதான் உண்மையான விஷயமாகும். அதைத் தேடிடுங்கள்.

கலந்து கொண்ட உறுப்பினர் ஒருவர் தினசரி ஐவேளை தொழுகைகளைக் கடைபிடிக்காத தந்தையர்கள் குறித்து அவர்கள் பிள்ளைகள் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களிடம் வழிகாட்டல் வேண்டினார்.

ஹுஸூர் கூறினார்கள்: இது தொடர்பாக நான் பல முறை பல சொற்பொழிவுகளில், லஜ்னாவிடமும், ஜமாஅத்தின் ஆண்களிடமும் கூறியிருக்கிறேன். அதாவது, ஆண்கள் தமது முன்மாதிரியைக் காட்டுங்கள். பெண்கள் மீது மட்டுமே விட்டு விடாதீர்கள். பெண்கள் தம் பிள்ளைகளிடம், 'நாம் அல்லாஹ்வின் பேச்சைக் கேட்க வேண்டும் இது அல்லாஹ்வின் கட்டளை ஆகும். எனவே, நாம் தொழு வேண்டும்' என்று கூறுங்கள். தந்தையிடம், 'குழந்தைகள் முன்பு ஏன் உங்கள் தவறான முன்மாதிரியைக் காட்டுகிறீர்கள்?' என்று கேளுங்கள். (சரியா!)

நம்மால் புரியவைக்கதானே முடியும். சந்தர்ப்பம் பார்த்து அவர்களுக்குப் புரிய வையுங்கள். துஆ செய்யுங்கள். தந்தையர்களிடம் சண்டையிடுவதற்கான தேவையில்லை. அடுத்த நாளே அவர்கள், 'நீங்கள் உங்கள் வீட்டுக்கு செல்லுங்கள். என் வீட்டை விட்டு வெளியேறி விடுங்கள்' என்று கூறிவிடக் கூடாது. நுட்பமான முறையில் குழந்தைகளுக்கும்




புரிய வையுங்கள். தந்தையர்களுக்கும் புரிய வையுங்கள். இறைவணக்கம் இல்லாத மார்க்கம் மார்க்கமே அல்ல என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதியுள்ளார்கள். எனவே, இந்த விஷயங்களைப் பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுங்கள். பெரியவர்களுக்கும் சொல்லுங்கள். அல்லாஹ்வுக்கான உரிமைகளை நிறைவேற்றுவது கட்டாயமாகும்.

லஜ்னா உறுப்பினர்: உயிர்த் தியாகம் மிகவும் உயர்ந்த படித்தரமாகும். ஆண்கள் இந்தப் படித்தரத்தைப் போர்களிலோ அல்லது பல்வேறு நாடுகளில் அஹ்மதிகள் ஷஹீதாகி பெற்று விடுகிறார்கள். ந.்.ப்ஸுடன் செய்யும் ஜிஹாத் உயிர்த் தியாகத்தின் படித்தரத்தை போன்ற படித்தரத்தைப் பெற முடியுமா? பெண்களாகிய நாங்கள் இந்தப் படித்தரத்தை எப்படி அடைவது?

ஹுஸூர் கூறினார்கள்: பெண்களும் ஷஹீது ஆகியிருக்கிறார்கள். பாகிஸ்தானிலோ பெண்கள் 3, 4 பேர் ஷஹீதாகி இருக்கிறார்கள். எனவே, பெண்கள் அப்படியும் உயிர்த்தியாகத்தின் படித்தரத்தைப் பெற்று விட்டார்கள். மற்றபடி, நான் பலமுறை எடுத்துக் கூறியும் உள்ளேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஒரு ஹதீஸ் இருக்கிறது. ஒரு பெண் அன்னாரிடம் வந்து, 'ஆண்கள் பொருள் தியாகங்களும் அதிகம் செய்கிறார்கள். நிறைய சம்பாதிக்கிறார்கள். பிறகு, போர்களுக்கு செல்கிறார்கள். அங்கு ஜிஹாது செய்கிறார்கள். பிறகு, அங்கு ஷஹீதும் ஆகி விடுகிறார்கள். அவர்களுக்குப் படித்தரம் கிடைத்து விடுகிறது. நாங்கள் பெண்கள் வீடுகளில் உட்கார்ந்திருக்கிறோம்.

நாங்கள் எவ்வாறு இந்தப் படித்தரத்தை அடைய முடியும்?' என்று கேட்டார்.

அந்தக் காலத்தில் ஹஸ்ரத் உம்மே அம்மாரா (ரலி) போன்ற பெண்களும் சிலர் இருந்தார்கள். அவர்கள் போர்களில் பங்கு பெற்றும் வந்தார்கள். இன்னமும் பெண்கள் சிலர் இருந்தார்கள். அவர்கள் பெரும் போர்த் திறமையையும் வெளிப்படுத்தினார்கள். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆம், நீங்கள் உங்கள் வீடுகளில் இருக்கும்போது, உங்கள் வீடுகளைப் பாதுகாக்கிறீர்கள். உங்கள் பிள்ளைகளுக்குத் தர்பிய்யத் கொடுக்கிறீர்கள். வீட்டை நீங்கள் சீர்தூக்கி வைத்துள்ளீர்கள். வீட்டில் மார்க்க சூழலை உருவாக்கி வைத்திருக்கிறீர்கள். பிள்ளைகள் இஸ்லாமிய போதனைகளில் வளர்கிறார்கள் என்றால், இந்த ஷஹீதுகளின் படித்தரமாக இருப்பதுதான் உங்களுடைய படித்தரமும் ஆகும். அவ்வளவு நற்கூலி உங்களுக்கும் கிடைத்துக் கொண்டிருக்கும்.

ஆக, உங்களைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே கூறி விட்டார்கள். அதாவது, நீங்கள் போர் புரியாமலே உங்களுடைய போரும் கணக்காகி விட்டது; உங்களுடைய படித்தரமும் உயர்ந்து விட்டது. (சரியா!) இதனால்தான் அல்லாஹ் பெண்ணின் காலடியில் சொர்கத்தையும் வைத்து விட்டான். ஆண்களின் காலடியில் ஒன்றும் வைக்கவில்லையே! வேறு என்ன வேண்டும் உங்களுக்கு?

உயிர்த் தியாகத்தின் படித்தரம் உயர்ந்தது என்றால், சொர்கத்திற்கு கொண்டு செல்பவரின் படித்தரம் இன்னும் உயர்ந்ததாகும். உயிர்த் தியாகியோ, தான் சொர்க்கத்திற்கு செல்வார் அல்லவா? பெண்ணோ சரியான தர்பிய்யத் கொடுத்து. மற்றவர்களை சொர்கத்திற்குக் கொண்டு செல்வார்.



லஜ்னா உறுப்பினர்: இன்றைய நிலைகள் இப்படி இருக்கின்றன. போர்கள் நடக்கின்றன. இறைவன் இருக்கிறான் என்றால், ஏன் இந்த அநீதி நிகழ்கிறது என மக்கள் கேட்கிறார்கள்?

ஹுஸூர் கூறினார்கள்: இதற்கு முன்பு போர்கள் நடைபெற்றதில்லையா? அனைவரும் என் மீது நம்பிக்கை கொள்வார்கள் என்று அல்லாஹ் எப்போது கூறினான்? அல்லாஹ்வோ திருக்குர்ஆனில் இவ்வாறு எழுதியுள்ளான்: அல்லாஹ் ஆதம் (அலை) அவர்களைப் படைத்தபோது, ஷைத்தான், 'நான் இவர்களுடைய வழித்தோன்றல்களை வழிகெடுப்பேன் பலர் எனக்குப் பின்னால் செல்வார்கள்; அல்லாஹ் கூறுவதைக் கேட்க மாட்டார்கள்' என்று கூறினான். அதற்கு அல்லாஹ் கூறினான்: சரி, உனக்குப் பின்னால் செல்ல மாட்டார்கள் என்று அல்லாஹ் கூறவில்லை. மாறாக, 'நான் உன்னையும் உனக்குப் பின்னால் செல்பவர்களையும் நரகத்தில் போட்டு விடுவேன்' என்று கூறினான். எனவே ஷைத்தானுப் பின்னால் செல்வதனால் போர்கள் நடக்கின்றன. மக்கள் ஷைத்தானைப் பின்பற்றுகின்றனர். எனவேதான் அவர்கள் கொடுமையிழைக்கின்றனர்.

பிறகு, அநீதியிழைப்பவரை அல்லாஹ் இம்மையில் என்ன? இந்த உலகமோ தற்காலிகமானது தானே! 80, 90 அல்லது 100 வயது வரைதானே! நிரந்தர வாழ்வான மறுமையில், அப்பொழுது அல்லாஹ் அவர்களை நரகத்தில் இடுவான். அநீதியிழைக்கிறார்கள், குற்றமற்றவர்களைக் கொல்கிறார்கள், பெண்களைக் கொல்கிறார்கள் என்பதற்காக சிலருக்கு இங்கும் தண்டனை வழங்கி விடுகிறான். சிலரை அடுத்த உலகில் இடுவான். சிலர் செய்யும் செயல்கள் அப்படி இருக்கலாம். அதனால் அல்லாஹ் ஏதாவது ஒரு சமுதாயத்திற்கு தண்டனை அளிப்பதற்காக இவ்வாறு செய்யலாம். ஆனால், எவ்வாறாயினும் அநீதியிழைப்பவர் -களுக்கு நான் மறுமையில் மிகவும் அதிகமாக தண்டனை அளிப்பேன் என்று அல்லாஹ் கூறுகிறான்.

எனவே, அல்லாஹ்வோ முன்னரே கூறி விட்டான்: ஷைத்தானுக்குப் பின்னால் நிறைய பேர் செல்வார்கள். இது நன்மை, இது தீமை என்று உங்களுக்கு நான் சொல்கிறேன் நான் சொல்வதைக் கேட்டால் அநீதியிலிருந்து தப்பித்துக் கொள்வீர்கள். இவ்வுலகிலும் நிம்மதியாக வாழ்வீர்கள். சொர்க்கத்திற்கும் செல்வீர்கள். ஷைத்தானுக்குப் பின்னால் செல்வீர்களாயின், நீங்கள் இந்த உலகில் நான் நிறைய சம்பாதித்து விட்டேன். ஆடம்பரமாக இருந்து விட்டேன். நன்கு வசதியாக இருக்கிறேன் என்று நினைப்பீர்கள். ஆனால், மறுமையில் நான் உங்களை நரகத்தில் போடுவேன். ஆக, அல்லாஹ் இருக்கிறான். அல்லாஹ் முன்னரே கூறி விட்டான்: 'நான் உங்களுக்கு முழு சுதந்திரம் அளித்து விட்டேன். மனிதனுக்கு அறிவை வழங்கியுள்ளேன். நான் சொல்வதைக் கேளுங்கள். கேட்டால் இந்த உலகில் நிம்மதியாக இருப்பீர்கள். அநீதி முடிவுக்கு வந்து விடும். கேட்கவில்லை என்றால், ஷைத்தானுக்குப் பின்னால் செல்பவர்களாக இருப்பீர்கள் என்றால், பிறகு, அநீதி நடக்கும். அநீதிக்கு இந்த உலகத்திலும் உங்களுக்கு தண்டனை கிடைக்கிறது; மறுமையிலும் கிடைக்கும். ஆக, இங்கோ அப்படி ஒரு விஷயம் இல்லை. இதனால் இறைவன் இல்லை என்ற பேச்சு எப்படி வரும்? இறைவன் இருக்கிறான். இறைவன் எங்குமே இதை பலவந்தம் எனக் கூறவில்லை. இறைவன் உங்களுக்கு மூளையை வழங்கியுள்ளான்; பயன்படுத்துங்கள். மேலும், முழு சுதந்திரம் வழங்கியுள்ளான்.

மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா அமெரிக்காவின் மேரிலேண்ட் பகுதியைச் சார்ந்த குத்தாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களைச் சந்திக்கும் நற்பேறு பெற்றார்கள். UK-விலுள்ள இஸ்லாமாபாதில் நடைபெற்ற இந்த சந்திப்பில் பங்குபெறும் குறிப்பான நோக்கத்திற்காக குத்தாம் 31 பேர் பயணம் மேற்கொண்டு வந்திருந்தனர். இந்த

சந்திப்பின்போது, குத்தாம் அனைவரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர், மேலும் நிகழ்காலத்தில் இளைஞர்களைப் பாதிக்கும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து ஹுஃஸூர் அவர்களிடம் வழிகாட்டல் பெற்றுக் கொண்டனர்.

காதிம்: ஹுஃஸூர் நான் இருக்கின்ற பகுதியில் இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்கும் பல பாதுகாப்பு நிறுவனங்கள் உள்ளன. ஜமாஅத் நபர்கள் பலரும் எனக்குத் தெரிந்த சிலரும் இந்த நிறுவனங்களில் பணிபுரிகின்றனர். ஹுஃஸூர் நாம் இந்த நிறுவனங்களில் பணி புரிவது ஆகுமானதா, இல்லையா?

ஹுஃஸூர் கூறினார்கள்: நிர்பந்தமான நிலையில் பன்றி இறைச்சி உண்பது ஆகுமானது என்றால் - நீங்கள் பசியால் மரணிக்கிறீர்கள் என்றால், பன்றி இறைச்சியும் உண்ணலாம் என்று திருக்குர்ஆனில் எழுதப்பட்டுள்ளது அல்லவா? பிறகு இதையும் உண்ணலாம். நிர்பந்தம் என்பது வேறு விஷயமாகும். மற்றபடி, இஸ்ரேலுக்கு விநியோகம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் ஒன்றும் நீங்கள் உருவாக்குவதில்லையே!

நாம் நமது நாட்டிற்காக வேலை செய்ய வேண்டும். அதன் பாதுகாப்புக்காக நாம் ஆயத்தம் செய்கிறோம் என அப்பாவிகள் தயாரிக்கிறார்கள் பாவம்! இஸ்ரேலுக்கு விநியோகம் செய்கிறார்கள் என்றால், அது வேறு விஷயம். முழு உலகத்துக்கும்தான் விநியோகிக்கிறார்கள். அது மட்டுமின்றி, நீங்கள் சூடானில் இராணுவத்துக்கு விநியோகமும் செய்கிறீர்கள். இராக்கில் கொடுத்து வந்துள்ளீர்கள். ஆஃப்கானிஸ்தானிலும் கொடுத்து வந்துள்ளீர்கள். அது ஆகுமானதாக இருந்ததா? என்று ஹுஃஸூர் அவர்கள் கேட்டார்கள்.

காதிம்: தெரியவில்லை என்றார்.

ஹுஃஸூர் கூறினார்கள்: இல்லை, அங்கும் ஆகுமானதாக இருக்கவில்லை. இங்கும் ஆகுமானதல்ல. ஆனால், நீங்கள் அங்கு வேலை செய்பவர்கள்தான். எனவே இதற்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. சரி, உங்களது தொழிற்சாலையைத் திறந்திடுங்கள். நிறுவனத்தைத் திறந்திடுங்கள். அஹ்மதி திறப்பார் என்றால், அமைதியை நிலைநாட்டுங்கள். இதற்கான தேவை எதுவும் இல்லை என்று கூறி விடுவார். சட்ட அமலாக்கத் துறையிடம் மட்டும் கொடுத்து விடுவீர்கள் அவ்வளவுதான்.

காதிம் ஒருவர் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அமெரிக்க அதிபர் குறித்து ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் கேட்டார்.

ஹுஃஸூர் கூறினார்கள்: அவரது கொள்கைகளுக்கு ஏற்ப அவர் என்ன செய்யவிருக்கிறார் அல்லது என்ன செய்ய மாட்டார் என்பது தெரியும். அவர் வரும்போது, அமெரிக்கர்களை ஏதேனும் இன்னல்களுக்கு ஆளாக்குவாரா? இல்லையா தெரியவில்லை. வெளி மக்களைக் கண்டிப்பாக ஆளாக்குவார். அவரது முந்தைய பதவிக் காலத்தில் அவர் எளிமைகளைத்தான் ஏற்படுத்தினார். அவ்வளவு அதிகம் சண்டைகள் செய்யவில்லை. இப்பொழுது வரை தென்படுவதாவது, அவர் இஸ்ரேல் போரை நிறுத்தி விடுவார். நிரந்தர போர் நிறுத்தம் ஏற்பட்டு விடும் என்கிறார். ஆனால் நடக்காது. தற்காலிகமானதுதான். அதற்குப் பிறகு, சரி, இங்கிருந்து இங்கு வரை உள்ள பகுதியைப் பிறகு எடுத்துக் கொள்ளுங்கள் என்று அவர் இவர்களுடன் ஏதாவது மறைமுக ஒப்பந்தம் செய்திருக்கக் கூடும்.

மற்றபடி உலகத்தில் உள்ள மோதல்களை ஓரளவுக்கு அவர் நிறுத்துவார். இங்கிருந்தும் டிக்டாக்கை இப்பொழுது தடை செய்து விட்டோம் என்ற அவர்கள் கூறி விட்டார்கள். சீனாவுடன் இப்படி நடந்து கொண்டார்கள். அப்படி நடந்து கொண்டார்கள் என்று மிகவும் மகிழ்ச்சி அடைந்து விட்டார்கள். அவருக்குப் பணம் வேண்டும். எங்களுக்கு 50 சதவீதம் பங்கு கொடுத்து விடுங்கள். பிறகு, தாராளமாக டிக்டாக்கை




அமேரிக்காவில் செயல்படுத்திக் கொள்ளுங்கள் என்று கூறி விட்டார். அவருக்கு பணம் கிடைத்துக் கொண்டே இருந்தால் அவர் அமைதியாக இருப்பார். எங்கு அவருக்கு பொருளாதார இழப்பு ஏற்படுமோ அங்கு அவர் தனது விருப்பப்படி செயல்படுவார்.

எனவே யார் வந்தாலும் இப்படியானவராகத்தான் வருவார். உங்களுக்கு உங்கள் அமெரிக்காவில் இறைநேசர்கள் யாரும் கிடைக்க மாட்டார்கள். எல்லாரையும் அஹ்மதிகளாக ஆக்கி விட்டீர்கள் என்றால் சரி. அல்லது அஹ்மதிகள் அந்தத் தரத்தில் வந்து விட வேண்டும். அரசியலில், ஆட்சி அதிகாரத்தில் அல்லது தொழில் துறையில் எங்காவது வர வேண்டும். பிறகு, சரிதான். பிறகு, நீங்கள் ஏதாவது செய்ய முடியும்.

காதிம்: தலைமையகத்திலுள்ள உள்ளூர் மற்றும் மற்ற மஜ்லிஸ்களில் என்ன வித்தியாசம் இருக்கிறது? முஹ்தமிம் முகாமிக்கும் உள்ளூர் காயிதுக்கும் தேர்தல் இன்றி தேர்ந்தெடுப்பதில் உள்ள நுட்பம் என்ன?

ஹுஃஸூர் கூறினார்கள்: தலைமையகத்திலுள்ள மஜ்லிஸிற்கும் மற்ற மஜ்லிஸ்களுக்கும் என்ன வித்தியாசமா? எந்த வித்தியாசமும் இல்லை. இதுவும் மஜ்லிஸ்தான். அதுவும் மஜ்லிஸ்தான். உள்ளூர் மஜ்லிஸ் தலைமையகத்திற்கு அருகில் இருப்பதனால், நீங்கள் அதனை உள்ளூர் மஜ்லிஸ் என்று கூறுகிறீர்கள். இப்பொழுது இங்கு அமெரிக்காவிலோ ஜமாஅத் அமைப்பு அப்படி இல்லவே இல்லை. தலைமையகம்

அங்கே இருக்கிறது. ஆனால், உங்கள் அமீர் 4000 மைல் தொலைவில் இருக்கிறார். தஹ்ரீகே ஜதீத் செயலர் 5000 மைல் தொலைவில் இருக்கிறார். மற்றவர் West Coast இல் இருக்கிறார். இன்னொரு செயலர் அதற்கும் மேலாக West Coast இன் அடுத்த மூலைக்கு சென்று விடுகிறார்.

எனவே இப்படி உங்களது தேசிய ஆமிலாவும் சிதறிக் காணப்படுகிறது. ஆனால், அவ்வாறிருந்தும், அமைப்பை வைக்க வேண்டியிருந்தது. எனவே, உங்கள் தலைமையகம் இருக்கும் அந்த இடத்தை முகாமி ஜமாஅத்தாக (உள்ளூர் ஜமாஅத்தாக) ஆக்கியுள்ளார்கள். எவ்வாறாயினும், அமீர் இரண்டு வாரங்களுக்குப் பிறகு வந்தாலும் சரி, வர வேண்டியிருக்கிறது அல்லவா? எனவே, அதற்கு தலைமையகம் என்று பெயர் வழங்கி விட்டார்கள். அங்குள்ள மஜ்லிஸ் முகாமி (உள்ளூர் மஜ்லிஸ்) என்று அழைக்கப்படுகிறது. எனவே, முகாமி மஜ்லிஸின் காயித் முஹ்தமிம் என்று அழைக்கப்படுவார் என்று சட்டத்தில் எழுதப்பட்டுள்ளது. எனவே, அவரை முஹ்தமிம் முகாமி என்று கூறுகிறோம். பொறுப்புகள் மற்றவர்களுக்கு இருக்கும் அதே பொறுப்புகள்தான் இருக்கின்றன. அவர் காயித் என்று அழைக்கப்படுவதற்குப் பதிலாக முஹ்தமிம் என்று அழைக்கப் -படுவதால் அவருக்கு சற்று உயர் பதவி கிடைத்து விட்டது. ஆனால், காயிதுக்கு இருக்கும் பொறுப்புகள்தான் அவருக்கும் இருக்கின்றன. தேர்தலால் என்ன வேறுபாடு ஏற்படுகிறது? மற்ற காயித்மார்கள் தேர்வும் செய்யப்படலாம். நியமிக்கவும் படலாம். ஆனால், முஹ்தமிம் முகாமிக்குத் தேர்தல் நடப்பதில்லை. அவர் சத்ருடைய ஆமிலா உறுப்பினராக இருப்பதால் சத்ரே அவரை நியமிக்கிறார் அல்லது இவரை ஆக்குமாறு காலத்தின் கலீ:.பாவுக்குப் அவரது பெயரை பரிந்துரை செய்கிறார். இவ்வளவுதான் வித்தியாசம். ஆனால், பொறுப்புகளில் எந்த வேறுபாடும் இல்லை.

காதிம்: அன்பிற்குரிய ஹுஃஸூர் அவர்களே! சிலவேளை அறுவை சிகிச்சை அல்லது ஏதாவதொரு மருத்துவ செயல்முறையின்போது சில சிக்கல்கள் ஏற்பட்டு விடுகிறது. இதனால் நோயாளிக்கு இழப்பு ஏற்பட அல்லது சிலவேளை அவர்கள் வ:.பாத் ஆகி விடும் ஆபத்தும் இருக்கிறது. இத்தகைய சூழல் மருத்துவருக்கும் மன அழுத்தமுடையதாக ஆகிறது. மேலும் இத்தகைய அறுவை சிகிச்சை குறித்த அச்சமும் மனதில் இருந்து விடுகிறது. இதனால் மற்ற நோயாளிகளுக்கு அளிக்கும் சிகிச்சை பாதிக்கப்படலாம். ஹுஃஸூர் அவர்களே! இது குறித்து எங்களுக்கு வழிகாட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஹுஃஸூர் கூறினார்கள்: பலவீனமான மனநிலை கொண்ட நபர் மருத்துவராகவே கூடாது. மருத்துவரின் மனநிலை உறுதியாக இருக்க வேண்டும். அதைக் கட்டுப்படுத்தி வையுங்கள். துணிச்சல் இருக்க வேண்டும். இதெல்லாம் நடந்து கொண்டுதான் இருக்கும். உங்களது சிகிச்சையால் 100 சதவீதம் மக்கள் குணமடைவார்கள் என்று எங்கே எழுதப்பட்டுள்ளது? அல்லாஹ்விடமே நிவாரணத்தை வேண்ட வேண்டும். நீங்கள் சிகிச்சை செய்யும்போது ஹுஃவஷ்ஷா:.பீ - அல்லாஹ் குணமளிப்பவன் என்ற துஆவை சிந்தனையில் வைத்திருங்கள். பிறகு, அல்லாஹ் குணமளிப்பவன் ஆவான். நாம் நம்முடைய வழிவகைகளை -யும் முயற்சிகளையும் செய்ய வேண்டும். மற்றபடி அவருக்கு குணமளிப்பது அல்லாஹ்வின் பணியாகும். குணமளிப்பது மருத்துவரின் வேலையல்ல. இது மூளையில் இருந்தால், ஹுஃவஷ்ஷா:.பீ - அல்லாஹ் குணமளிப்பவன் என்ற துஆவும் வரும். இவ்வாறு மருத்துவ செயல்முறையையும் செய்வீர்கள்.




அறுவை சிகிச்சையும் செய்வீர்கள். அல்லது அளிக்க வேண்டிய சிகிச்சையை அளிப்பீர்கள். ஆக, அல்லாஹ் சிந்தனையில் இருந்தான் என்றால், பிறகு, பிரச்சனை விலகி விடும். (சரியா!)

நான் எனது திறமையால் அவரை சரிசெய்கிறேன் என்று நீங்கள் கருதினால், பிறகு ஏன் அறுவை சிகிச்சைக்கு முன்பு நோயாளியிடமோ அல்லது அவருடைய உறவினர்களிடமோ சம்மதம் வாங்குகிறீர்கள்? ஏதாவது ஆகிவிட்டால் நாங்கள் பொறுப்பில்லை என்பதற்காகத்தானே வாங்குகிறீர்கள்! நாங்கள் பொறுப்பாளி இல்லை என்று நீங்கள் முன்னரே சொன்ன பிறகு, கவலைப்பட வேண்டிய தேவை என்ன இருக்கிறது?

அறுவை சிகிச்சை அறைக்குக் கொண்டு செல்வதற்கு முன்னால், நோயாளியிடம் கையொப்பம் இடுங்கள் என்று கூறுகிறீர்கள். இந்த மருத்துவர் என்னோடு என்ன செய்வாரோ தெரியவில்லையே! இறந்து விட்டால் ஒன்றும் செய்ய முடியாது என்கிறாரே என்ற (கவலையில்) அப்பொழுதே அந்த நோயாளிக்கு உயிர் போய் விடும்.

ஆக, மனஅழுத்தம் ஏன்? மற்றபடி, இதனால்தான் நீங்கள் மருத்துவர்கள் அமெரிக்காவில் காப்பீடு எடுத்துக் கொள்கிறீர்கள். அதாவது, நோயாளி இறந்து விட்டால் நாம் எதுவும் கொடுக்க வேண்டி வரக்கூடாது. ஏதாவது குற்றம் குறை ஏற்பட்டாலும் காப்பீட்டு நிறுவனம் நோயாளிக்கு இழப்பீடு வழங்கட்டும் என்று இதைத்தானே செய்கிறார்கள்.

காதிம்: ஆமாம்.

ஹுஃஸூர் கூறினார்கள்: இங்கோ அமெரிக்காவில் இருப்பது போன்று காப்பீடும் இருப்பதில்லை. இப்பொழுது

அமெரிக்காவில் மருத்துவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக செயல்படுகிறார்கள். மன அழுத்தம் ஏன்!

காதிம்: நமது பொறுப்புக்காக ஹுஃஸூர்!

ஹுஃஸூர் கூறினார்கள்: ஆமாம் பொறுப்பு இருக்கிறது. அதனால்தான் ஹுஃவஷ்ஷா.ஃ.பீ - அவன் குணமளிப்பவன் என்று கூறும்போது, பொறுப்பை அல்லாஹ்வின் மீது போட்டு விடுவீர்கள். இதனால்தான் நான் ஒருமுறை குத்பாவில் என்று நினைக்கிறேன், மருத்துவர்களுக்கு நீண்ட அறிவுரை கூறினேன். அஹ்மதி மருத்துவர்கள் ஹுஃவஷ்ஷா.ஃ.பீ - அவன் குணமளிப்பவன் என்று துஆ செய்ய வேண்டும். திருக்குர்ஆனிலும் இதுதானே எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் இப்படித்தானே துஆ செய்தார்கள்: 'நான் நோயுற்றிருக்கும்போது அல்லாஹ்வே எனக்கு குணமளிக்கிறான்.'

காதிம்: ஹுஃஸூர், எனக்கு 2 வயது மகள் இருக்கிறாள். அவளது பெயர் அலைனா. அவளைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பது நல்லதா அல்லது வீட்டிலேயே கல்வி புகட்டுவது பொருத்தமாக இருக்குமா என்பது குறித்து ஹுஃஸூர் அவர்களது வழிகாட்டலை வேண்டுகிறேன்.

ஹுஃஸூர் கூறினார்கள்: பல தருணங்களில், அவர்கள் பிள்ளைகளுக்கு துவக்கத்திலேயே பாலியல் கல்வி, பாலினக் கல்வி இன்ன இன்ன விஷயங்கள் போன்றவற்றைக் கற்பிக்கத் துவங்கி விடுகின்றனர். அதிலிருந்து பாதுகாப்பதற்காக அவளுக்கு வீட்டிலேயே கல்வி புகட்ட விரும்பினால் பிறகு அது வேறு விஷயம். அல்லது 4 ஆவது 5 ஆவது அல்லது 6 ஆவது வகுப்பில் போய் இந்தப் பாடங்களை அவர்கள் துவங்குகிறார்கள் என்றால், ஆரம்பத்தில் பிள்ளையைப் பள்ளிக்கூடத்தில் படிக்க வையுங்கள். பிறகு வெளியேற்றி வீட்டில் படிக்க வையுங்கள். தொடக்கக் கல்வி காலத்தில் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி விடுங்கள். இதனால் பலன் ஏற்பட்டு விடுகிறது. பிள்ளைகள் அதிகம் சமூகத்துடன் பழகும் வாய்ப்பு கிடைக்கும். அவர்களுக்கு வீட்டில் கல்வி புகட்ட வேண்டும் என்றால், பிறகு பள்ளிக்கூடத்துடன் செல்ல முடியாத அந்த பிள்ளைகளை சுற்றுலாவுக்கு நீங்களே வெளியே அழைத்துச் செல்ல வேண்டி வரும். சிலவேளை மலையேறுதல், வெளியூர் பயணம், நடை பயணம், படகு சவாரி சிலவேளை வேறு இடங்கள் என செல்ல வேண்டும் அல்லவா?

அதையெல்லாம் செய்ய முடியும் என்றால் சரி, பள்ளிக்கூடங்களில் அவர்கள் 12 ஆம் வகுப்பு வரை ஒன்றும் பாலியல் கல்வி அல்லது பாலினக் கல்வியைக் கற்றுக் கொடுப்பதில்லையே! அவர்கள் குறிப்பாக 4 ஆவது 5 ஆவது அல்லது 6 ஆவது வகுப்பு வரைதான் இது போன்ற விஷயங்களைக் கற்பிக்கின்றனர். அது போன்று எவ்வளவு மனதை மாசுபடுத்த வேண்டுமோ, பிள்ளைகளின் மனதை எவ்வளவு கெடுக்க முடியுமோ கெடுத்து விடலாம் என்று செய்கிறார்கள். அதற்குப் பிறகு, சரிதான். அதற்குப் பிறகு, நிலைமை என்ன என்று பார்த்துக் கொள்ளுங்கள். பிறகு, பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடுங்கள். இது உங்களால் எந்த அளவுக்கு பிள்ளையை கவனித்துக் கொள்ள முடியும் என்பதைப் பொருத்து இருக்கிறது.

காதிம்: கனவுகளின் முக்கியத்துவம் என்ன? அல்லாஹ் கனவுகளில் நமக்கு என்ன வழிகாட்டுகிறான் என்பதை நாம் எப்படி புரிய முடியும்?

ஹுஃஸூர் கூறினார்கள்: கனவுகளுக்கான விளக்கம் ஒவ்வொருவருக்கும் புரியவர முடியாது. எனவே நீங்கள் ஏதும் கனவு கண்டால், கனவுகளுக்கு விளக்கம் அறிந்த யாரிடமாவது அது நல்ல கனவா, கெட்ட கனவா என்பதைக் கேட்டு அறிந்து கொள்ளுங்கள். உங்களுக்குப் புரியவில்லை என்றால், நீங்கள் சொல்ல விரும்பவில்லை என்றால், கேட்க வெட்கமாக இருந்தால், பிறகு நல்ல கனவாக இருந்தாலும் சரி, தீய கனவாக இருந்தாலும் சரி, அல்லாஹ் அதன் நல்ல விளைவுகளை ஏற்படுத்தட்டும் என நீங்கள் ஸதக்கா கொடுத்து விடுங்கள். சில கனவுகள் அல்லாஹ்வின் புறமிருந்து வருகின்றன. அவை உண்மை கனவுகளாகவும் இருக்கின்றன. சில ஷைத்தானிய கனவுகளும் இருக்கின்றன. சில அப்படியே சிந்தனையில் வந்து விடுகின்றன. பகலில் என்ன நடக்கிறதோ அது கனவில் வந்து விடுகிறது. பொதுவாக ஒரு மனிதருக்கு தினமும் இரவு 4, 5 கனவுகள் வருவதாக உளவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். சில நினைவிருக்கின்றன. சில நினைவிருப்பதில்லை. காலையில் எழுந்து எனக்கு எந்தக் கனவும் வரவில்லை என்று நினைக்கிறீர்கள். ஆனால், இரவில் உறக்கத்தில் கனவுகள் வந்திருக்கும். எங்கெங்கோ சுற்றி வந்திருப்பீர்கள். (சரியா!) எந்தக் கனவு ஞாபகம் இருக்கிறதோ அதைப் பாருங்கள். அதில் என்ன செய்தி இருந்தது என்று அதை பரிசீலனை செய்யுங்கள். புரிந்தால் சரி. இல்லையென்றால், யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஹஸ்ரத் யூசு.ஃ.ப் (அலை) அவர்களது காலத்திலும் அரசனுக்குக் கனவு வந்தது அல்லவா? அவனுக்கு அது புரியவில்லை. அதற்கு Interpretation செய்பவர்கள் இதுவோ கற்பனை கனவுகளாகும் என்றார்கள். மூளையில் வரும் சிந்தனை என்றார்கள். ஆனால், ஹஸ்ரத் யூசு.ஃ.ப் (அலை) அவர்கள் அதற்கு விளக்கமளித்து விட்டார்கள். அவர்களுக்குப் புரிந்து விட்டது. ஏழு கதிர்கள், ஏழு பசுக்கள், அவர்களுடைய உணவுகள், இழப்பு ஏற்படுதல், பசுமையான வயல்வெளி இருப்பது, பஞ்சம் வருவது போன்ற இந்த விஷயங்கள் எல்லாம் அதில் இருக்கின்றன அல்லவா?

சிலருக்கு கனவுகளின் விளக்கம் புரிவதில்லை. எனவே, உங்களுக்கும் புரியவில்லை என்றால், ஸதக்கா கொடுத்து விடுங்கள். இதுதான் எளிய தீர்வாகும். நன்மையை வலியுறுத்தும் செய்தி தெளிவாக உள்ள ஒரு கனவு என்றால், நற்செயல்கள் பற்றி கூறப்படுகிறது என்றால், அல்லாஹ் நீங்கள் இவ்வாறு செய்திட விரும்புகிறான் என்றும், இது அல்லாஹ்வின் தரப்பிலிருந்து வந்துள்ள கனவு என்றும் புரிந்து கொள்ளுங்கள். தீமை செய்யுங்கள். ஒன்றும் ஆகாது என்று உங்களிடம் கூறப்பட்டால், அது ஷைத்தானிய கனவு என்று புரிந்து கொள்ளுங்கள்.

ஒரு நகைச்சுவை இருக்கிறது. எங்கள் பகுதியில் ஒரு பெரியவர் இருந்தார். அது பெரிய குடும்பமாக இருந்தது. அரசியலிலும் இருந்தார்கள். பெரும் நிலக்கிழார்கள் இருந்து வந்தார்கள். சர்கோதாவைச் சேர்ந்த நன்கு அறியப்பட்ட ஒரு குடும்பம் ஆகும். அவர்களில் ஒரு பெரியவர் ஹஸ்ரத் இரண்டாவது கலீ·பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது காலகட்டத்தில் அஹ்மதி ஆகி விட்டார். அவருக்குக் குழந்தைகள் இருக்கவில்லை. வயது முதிர்ந்த பிறகுஅவருக்கு ஒரு மகன் பிறந்தான். ஹஸ்ரத் இரண்டாவது கலீ·பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது துஆவால் மகன் பிறந்தாகக் கூறுகிறார்கள்.

எனவே, அவனை ரப்வாவுக்கு அழைத்து வந்தார்கள். இது ஆரம்ப கால நிகழ்வாகும். அப்போது ரப்வாவில் சாலைகள் கூட அமைக்கப்பட்டிருக்கவில்லை. ஆங்காங்கே மிகக் குறைவான வீடுகளே இருந்தன. அங்கு பள்ளிக் கூடத்தில் அவனை சேர்த்து விட்டார்கள். வசதியானவர்களாக இருந்தார்கள். அவருக்கு வண்டி வாங்கிக் கொடுத்திருந் -தார்கள். அவர் வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்துக் காரில் வருவார். அதே வேளையில், ரப்வாவில் மற்றவர்களிடம் உடைந்த சைக்கிள் கூட இருக்காது. அனைவரும் ஏழைகளாக இருந்தார்கள். ஒன்று, இரண்டு அல்லது மூன்று கார்கள் தான் முழு நகரத்திலும் இருந்தன. எவ்வாறிருப்பினும், முதிய வயதில் மகன் பிறந்திருக்கிறான். அவன் ஏதாவது படித்து தகுதிவாய்ந்தவனாகி விட வேண்டும் நற்பண்புள்ளவனாக ஆகி விட வேண்டும். எனது குடும்பத்தினர் போன்று அரசியலில் சென்று விடக்கூடாது. தீமைகளில் சென்று விடக்கூடாது என்ற நினைத்தார்கள். எனவே, எப்பொழுதும் அவனுக்குத் தொழுமாறு கூறி வந்தார்கள். அவர்கள் வாழ்ந்த காலம் வரை முபாரக் பள்ளிவாசலுக்கும் அழைத்து வருவார்கள். அவர்கள் சீக்கிரம் வ·பாத் ஆகியும் விட்டார்கள். அவர்கள் மனைவி முன்னரே வ·பாத் ஆகி விட்டார். இவரும் இவர் மகனும் இருந்தார்கள். வீடு பெரியதாக இருந்தது. இருந்தும் ஒரே அறையில் தான் உறங்குவார்கள்.

ஒரு நாள், அவர்கள் மகன் அவர்களிடம் கூறினார். தந்தையார் தினமும் தொழு தொழு, இதில் என்ன சிரமம் இருக்கிறது என்று சொல்கிறாரே என்று தொழுது தொழுது நொந்து போயிருந்தார். உங்களிடமும் சில நேரங்களில் என்ன சிரமம் இருக்கிறது! தொழுங்களேன் என்று கூறுகிறார்கள் அல்லவா? தொழுங்கள் என்று காயித் சாஹிப் கூறுகிறார். சத்ர் சாஹிப், தாய் தந்தையர் எல்லாரும் கூறுகிறார்கள். ஆக, அந்தப் பையனும் இப்படித்தான் இருந்தார். ஆக, ஒரு நாள் அவர் காலையில் எழுந்து கூறினார். தந்தையே! எனக்கு கனவு வந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கனவில் வந்தார்கள். அவர்கள், 'மகனே! நீ தொழாதே!' என்று கூறினார்கள்.

அவர் தந்தை மிகவும் புத்திசாலியாக இருந்தார். அவர், "இதோ பார், நாம் இங்கு இந்த அறையில் இருக்கிறோமா, எனது படுக்கை கதவுக்குப் பக்கத்தில் இருக்கிறது. உனது படுக்கை அந்தப் பக்கம் சுவருடன் சேர்ந்து இருக்கிறது. எனவே, கதவு வழியாக வந்த ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எனது படுக்கையைத் தாண்டிக் குதித்து உன்னிடம் போய் தொழ வேண்டாம் என்று கூறப் போனார்கள் என்றால், என்னிடம் ஏன் கூறிச் செல்லவில்லை? தொழ வேண்டாம் என்று என்னிடமும் கூறியிருக்கலாமே! நானும் தொழுகையிலிருந்து விதிவிலக்கு பெற்றிருப்பேனே! பொய்யான கனவுகளை உருவாக்காதே" என்று கூறினார். ஆக, இப்படியும் மக்கள் சிலர் உருவாக்கிக் கொள்கிறார்கள். எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'கனவுகளைப் பொய்யாகப் புனைந்து கூறக்கூடாது' என்று கூறியுள்ளார்கள். குறிப்பாக ஒருவர் ஒரு பொய்யான கனவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தொடர்புபடுத்திக் கூறினால், அவர் தன்மீது சாபத்தை எடுத்துக் கொள்கிறார்.

எனவே, ஹகீகத்துல் வஹீ எனும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது நூல் இருக்கிறது. அது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு விட்டது என்று நினைக்கிறேன். அதன் முதல் 50-60 பக்கங்களைப் படித்தீர்கள் என்றால், அதில் கனவுகள் குறித்து, கனவு என்ன? உண்மைத்துவம் என்ன? என்ற அனைத்து விஷயங்களும் தெரிந்து விடுகின்றன. நீங்கள் முதிர்ச்சியடைந்தவராக இருக்கிறீர்கள். கல்லூரிக்கு, பல்கலைக்கழகத்திற்குச் செல்பவர்கள் என்றால், அதைப் படித்திடுங்கள். உங்களுக்கு அந்த அளவுக்கு அறிவுத்திறன் இருக்க வேண்டும். ஆரம்ப 50-60 பக்கங்களைப் படித்தாலே கனவுகளின் கருத்து என்ன? எது நல்ல கனவு எது கெட்ட கனவு என்று சரியாகத் தெரிந்து விடும்.

காதிம்: 2005 இல் ஹுஸூர் அன்வர் (அய்யத -ஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் காதியான் சென்றபோது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது புனித மண்ணறையின் முன்பு துஆ செய்தபோது, அப்பொழுது ஹுஸூர் அவர்களின் உணர்ச்சிகள் எப்படி இருந்தன?

ஹுஸூர் கூறினார்கள்: ஒவ்வோர் அஹ்மதிக்கும் இருப்பது போன்றுதான். நாம் வந்துள்ளோம் துஆ செய்ய வேண்டும் என்ற உணர்ச்சிகள்தான் இருந்தன. சென்று துஆ செய்ய வேண்டும் என்ற உணர்ச்சி இருந்தது. நான் முதன்முதலாக 1991 இல் சென்றபோது, அப்போதும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மண்ணறை முன் சென்று எனக்கு உணர்ச்சிகள் இருந்தன. அதே உணர்ச்சிகள் 2005 இலும் இருந்தன. எல்லாம் வல்ல அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது படித்தரத்தை உயர்த்துவானாக என்றும், அதே வேளையில், அன்னார் நிறுவிய ஜமாஅத்திற்கு முன்னேற்றத்தை வழங்குவானாக. நாம் அந்தப் பணியை சரியாக செய்யக் கூடியவர்களாக இருப்போமாக என்றே துஆவே இருந்தது. ஆக, உணர்ச்சிகளை மனிதன் துஆக்களில் வெளிப்படுத்துகிறான். ஒவ்வொரு மனிதருக்கும் தனிப்பட்ட உணர்ச்சிகள் இருக்கும். சில விஷயங்கள் விவரிக்க முடியாதவையாக இருக்கின்றன. ஆனால், உணர்ச்சிகள் இருக்கும். இப்பொழுதோ அது நடந்து 20 ஆண்டுகள் ஆகப் போகின்றன.

## அன்ஸாருல்லாஹ்வின் உறுதிமொழியை சாதாரண உறுதி மொழியாகக் கருதாதீர்கள்!

### (ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வழிகாட்டல்)

“இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் உறுதிப்பாட்டிற்காகவும் (அதைப்) பரப்புவதற்காகவும் இறுதி மூச்சு வரை முயற்சி செய்வேன் என்றும், கிலாஃபத் அமைப்பை பாதுகாப்பதற்காக இறுதி மூச்சு வரை முயற்சி செய்வேன் என்றும், தம் பிள்ளைகளிடத்திலும் இந்த ஆன்மாவை ஊதுவதற்கு முயற்சி செய்வேன் என்றும் நீங்கள் ஓர் உறுதிமொழி எடுத்துள்ளீர்கள். இந்த உறுதிமொழியை சாதாரண உறுதிமொழியாகக் கருதாதீர்கள்! இது ஒரு மாபெரும் உறுதிமொழியாகும். அல்லாஹ்வை சாட்சியாக வைத்து நாம் இந்த உறுதிமொழியை எடுக்கின்றோம். ஆகவே, அன்ஸாருல்லாஹ்வாகிய நீங்கள் உங்களுடைய இந்த உறுதிமொழியை நிறைவேற்றவில்லை என்றால், உங்களிடம் எதிர்பார்க்கப்படுகின்ற உங்களுடைய இந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதற்காக நீங்கள் முழுமையாக முயற்சி செய்யவில்லை என்றால், வருங்காலத்தில் வரக்கூடிய சந்ததிகள் உங்களை மன்னிக்காது என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! ஏனென்றால், அவர்களும் உங்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றிதான் செல்ல வேண்டியதுள்ளது. எந்த குழந்தைகளுக்கும் எந்த இளைஞர்-களுக்கும் நீங்கள் தர்பிய்யத் வழங்க வேண்டியதுள்ளதோ அவர்கள் உங்களைப் பார்த்து, நீங்கள் ஏன் எங்களுக்கு தர்பிய்யத் வழங்கவில்லை என்று உங்கள் மீது குற்றச்சாட்டு வைப்பார்கள். ஆகவே, நீங்கள் செய்த உறுதி மொழியை நிறைவேற்ற வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். (இது) உங்களுடைய மிகப்பெரும் பொறுப்பாகும்.”

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 9 ஜனவரி 2009)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam